வெளியீடு-24.7.1992

560

# தமிழ்நாடு

# சட்டமன்றப்பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு.

தொ.14 எண்-2

31.st January-1992

©

V2II,31 N92
N92.14.2

வெளியீடு 24-7-1992 Issued 24-7-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 31, 1992 - தொகுதி 14 - எண் 2

Friday the 31st January, 1992 - Volume 14 · No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

31—1—1992.

பக்கங்கள்.


சிறப்புக் குறிப்புகள்—

(அ) இலவச வேட்டி, சேலை ஏழைகள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து. 131–135

(ஆ) பி. அண்ட். சி. ஆலை திறக்கப்பட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து. 135–139

2. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு. 139–141

(ஆ) அரசு உறுதி மொழிக் குழு. 141

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. 142–204

திருமதி. கே. பஞ்சவர்ணம் 142–148

திரு. என். பன்னீர்செல்வம் 148–157

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா. 157–159

டாக்டர் ஜெ. பரந்தாமன் 159–165

திரு. கே. செல்வராஜ் 165–169

*திரு. சி. இராமசுவாமி. 170–174

திரு. எம். கே. சுந்தரம் 174–181

திரு. எஸ். எம். கிருஷ்ணன். 181–187

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் 194–197

திரு. ஓ. எஸ். அமர்நாத் 198–201

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் 201–204

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 205

162264

D
V211,31 N92
N92.14.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**தை 17, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023**

**1992 ஜனவரி 31, வெள்ளிக்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 4.30 மணி அளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு."

ஆக்கமும், கேடும், ஒருவர் சொல்கின்ற சொல்லால் வருவதால், தான் சொல்லும் சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்வது நல்லது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. சிறப்புக் குறிப்புகள்

### (அ) இலவச வேட்டி, சேலை ஏழைகள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில இன்றியமையாத பிரச்சினைகள் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்தில் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகின்றபோது, ஒத்திவைப்புத் தீர்மானம் போன்ற விஷயங்கள் விதி 56-ன் கீழ் எடுக்கப்படுவது கிடையாது என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும், பிரச்சினைகளுடைய இன்றியமையாமையைக் கருத்திற்கொண்டு, சில நேரங்களில் சிறப்பு கவன ஈர்ப்புகளாக அனுமதிக்கிறேன். அந்த வகையில் அந்தப் பிரச்சினையை மட்டும் இங்கே எழுப்பி, அரசாங்கத்தினுடைய பதிலைப் பெறுகிற வகையில் அவர்கள் பிரச்சினையை மட்டும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாக, தமிழ்நாடு முழுவதும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற இலவச வேட்டி, சேலை எல்லோருக்கும் வழங்கப்படவில்லை என்பது பற்றிய ஒரு பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. ஆர். சிங்காரம் என்னிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏழை விவசாயக் கூலிகளுக்குப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் இலவச வேட்டி, புடவை வழங்கப்பட்டது. இதிலே பெரும்பகுதி ஏழை விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும், ஏழைகளுக்கும், மீனவ ஏழைகளுக்கும் நெசவாளர் ஏழைகளுக்கும் இன்னும் வேட்டி, புடவைகள் வழங்கப்படவில்லை. ஸ்டாக் இல்லாத காரணத்தினால் இவற்றிலே 30 சதவீதம் தான் வழங்கப்பட்டிருக்கிறது. மீதம் 70 சதவீதம் இன்னும் வழங்கப்படவில்லை. எனவே, இந்த நிலையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, உடனடியாக இந்த விவசாயக் கூலிகளுக்கு வழங்கப்பட்ட வேட்டி, புடவைகள் போல, மற்ற ஏழைகளுக்கும் வழங்கப்பட வேண்டும். அரசினுடைய ஸ்டாண்டிங் உத்தரவு, இதற்கு முன்னாலே இருந்த அரசிலும் சரி, இப்போது இருக்கின்ற அரசிலும் சரி, விவசாயக் கூலிகளுக்கு மட்டும்தான் இந்த இலவச வேட்டி, புடவைகள் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருக்கிறது. அதை மாற்றி ஏழைகளுக்கும் இந்த வேட்டி, புடவைகள் கொடுக்கப்பட வேண்டும். இதிலே ஏழைகள் என்றால் பல்வேறு வகையான ஏழைகள் இருக்கிறார்கள். நெசவுத் தொழில் செய்யும் ஏழைகள் இருக்கிறார்கள். மீனவ நண்ப ஏழைகள் இருக்கிறார்கள். சாதாரண ஏழைகள் இருக்கிறார்கள். ஆக, இந்த ஏழைகளுக்கெல்லாம் இந்த இலவச வேட்டி, புடவைகள் கிடைக்கவில்லை. ஆகவே, விவசாயக் கூலிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற இலவச வேட்டி, புடவைகள், இந்த வகையான ஏழைகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இதிலே 1¼ கோடி ஏழை மக்களுக்கு இந்த இலவச வேட்டி, புடவைகள் கொடுக்கப்படுகின்ற நிலையில், தரமான வேட்டியும், புடவையும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். ஒரு சில இடங்களில் தரமான வேட்டி, புடவைகள் கிடைக்கவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிங்காரம், நீங்கள் பிரச்சினையை மட்டும் சொன்னீர்கள் என்றால் அமைச்சருடைய பதிலைப் பெறலாம். நீங்கள் விரிவாகப் பேசவேண்டுமென்றால், விதி 56-லே எடுத்திருப்பேன் இல்லையா ?

**திரு. ஆர். சிங்காரம்:** ஆகவே அதிகமான வேட்டி, புடவைகள் கொடுக்கின்ற காரணத்தினால், சில இடங்களில் தரமற்ற வேட்டி, புடவைகளும் போய்ச் சேர்ந்து விடுகின்றன. ஆகவே, இனிமேல் கொடுக்கின்ற 70 சதவீதம் வேட்டி, புடவைகளிலும் தரமான வேட்டி, புடவைகளாகக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்ற நேரத்தில், இதை 30 சதவீத மக்கள் போக, மீதம் 70 சதவீத மக்கள் இந்த இலவச வேட்டி, புடவை தங்களுக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்று ஒரு சூழ்நிலையில், ஏமாற்றமுறுகிற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு, அவர்களுக்குத் தெளிவுபடுத்தி, எல்லா ஏழைகளுக்கும், வேட்டி, புடவை கிடைப்பதற்கான முயற்சியினை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 4-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற வேஷ்டி, சேலைகள் தேங்கி இருப்பதனால்தான் அவர்கள் பட்டினியாகக் கிடந்து கஷ்டப்படுகிறார்கள் என்று எண்ணி பேரறிஞர் அண்ணா அவர்களும், மற்றவர்களும் கைத்தறி வேஷ்டி துணிகளை வீதி-வீதியாகச் சென்று விற்றது உங்களுக்குத் தெரியும். அண்ணா வழியில் வந்த புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அதை நீக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஏழை எளியவர்களுக்கு வேஷ்டி, சேலைகள் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதே அடிப்படையில்தான் இன்றைக்கு அண்ணா அவர்கள் மற்றும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் வழி வந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடியே இருபது இலட்சம் பேர்களுக்கு வேஷ்டி, சேலை கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 ஜனவரி 31

அதைக் கொடுத்துக்கொண்டு வருகிறபோது ஒரே நேரத்தில் ஒரு கோடியே 20 இலட்சம் வேஷ்டி, சேலைகள் தமிழகத்தில் கிடைக்கவில்லை. கிடைத்தவரைக்கும் அவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இதுவரையில் ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பத்தைந்து பேர்களுக்கு வேஷ்டி, சேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீதி அறுபத்திரண்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் பேர்களுக்கு வேஷ்டி, சேலைகள் கொடுக்கப்படவில்லை. மற்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி தரக்குறைவான வேஷ்டி, சேலைகள் இருக்கக்கூடாது என்பதில் இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. இன்றைக்கு கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில்தான் அவையெல்லாம் வாங்கப்படுகிறது. அதுமட்டும் அல்லாமல் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசின் சார்பிலே ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. எங்கெங்கே தரக்குறைவான வேஷ்டி, சேலைகள் வந்தாலும் அதை வாங்கக்கூடாது, திருப்பி அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தரக் குறைவான வேஷ்டிகள், சேலைகள் வாங்கப்படமாட்டாது; வாங்கினால் திருப்பி அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்களுக்குக் கொடுப்பதைப்பற்றி தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவெடுத்து அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்தார்கள். இந்த ஆண்டு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேஷ்டி, சேலைகள் வழங்குவதைப் பொறுத்தவரையில் பெரும்பாலான இடங்களில் கிராமப்புறங்களில் வாழ்கிற கைவினைஞர்களுக்கு அந்த வேஷ்டி, சேலைகள் தரப்படவில்லை என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வழக்கமாக கிராமப்புறத்தில் வாழ்கிற கைவினைஞர்கள் அத்தனை பேர்களும் இந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பட்டியலில் தான் இடம் பெறுவார்கள்.



1992 ஜனவரி 31] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதுமட்டுமல்லாமல் புதிதாக அதிகாரிகள் ரேஷன் கார்டுகளை வாங்கி 200 ரூபாய், 250 ரூபாய் வருவாய் என்றிருந்த இடத்திலே எல்லாம் 350 ரூபாய், 400 ரூபாய் என்று புதிதாக மாற்றம் செய்திருக்கிறார்கள். எனவே அந்த வகையில் பலர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இலவச வேஷ்டி, சேலைகள் கொடுக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் என்றவுடன் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவில் அவர்கள் எல்லாம் வந்துவிடுவார்கள். அப்படி எங்கேயாவது கிடைக்கவில்லை என்றால் இன்றைக்கு நான் சொல்கிறபோது ஏறக்குறைய அறுபத்திரண்டு இலட்சம் பேருக்குக் கிடைக்கவில்லை என்றால் கொடுக்கப்படாதவர்கள் எல்லாம் அந்தப் பட்டியலில்தான் இருப்பார்கள். அந்தப் பட்டியலிலே இருப்பவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய முயற்சிகளை முதலமைச்சருடைய உத்தரவு வந்தவுடன் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) பி. அண்ட் சி. ஆலை திறக்கப்பட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னை நகரத்தில் உள்ள பி. அண்ட் சி. ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. அ. செல்வராசன், திரு. இளம்வழுதி, திருமதி இலதா பிரியகுமார், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் என்னிடத்தில் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி சுருக்கமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. அ. செல்வராசன்.

[1992 ஜனவரி 31

**திரு. அ. செல்வராசன்** : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இளம்வழுதி அவர்கள் பேசுவார்கள் ஏனென்றால் அவர் தான்[redacted]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் கிளப்பவில்லை என்றால் நான் தம்புசாமி அவர்களைக் கூப்பிட வேண்டி இருக்கும். நீங்கள் முன் வரிசையில் இருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் உங்களை முன்னுரிமை கொடுத்து கூப்பிட்டேன். (குறுக்கீடு) அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. தம்புசாமி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். முன் வரிசையில் இருக்கிறீர்கள் என்பதற்காக உங்களைப் பேசச் சொல்கிறேன். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர் என்று பேசுவதில்லை இதிலே.

**திரு. அ. செல்வராசன்** : பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே உள்ள பிரச்சினை இது. எனவே அவர் தான் கொடுத்திருக்கிறார். அவர்தான் பேசவேண்டும். விதி 56-இல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது 56-இல் வரவில்லை. (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

பிற்பகல் 4-40

**திரு. வே. தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள பி. அண்டு சி. மில் கடந்த 1—4—1991 மூடப்பட்டுள்ளது. இது ஒரு நிறுவனத்திற்கு சொந்தமானது ஆகும். ஏறத்தாழ அந்த மில் 117 ஆண்டுகால பாரம்பரியம் மிக்கது. அந்த பி. அண்டு சி. மில் இப்போது சட்ட விரோதமாக மூடப்பட்டு, ஏறத்தாழ 8 ஆயிரம் தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பங்களும் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு 7—9—1991 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த பகிரங்க வேண்டுகோள் ‘தொழிலாளர்கள் குடும்பங்கள் மகிழ்ச்சியடையும்படியான ஒரு தகுந்த முடிவை விரைவிலே அரசு எடுக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது’ என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை





யிலும் அந்த ஆலை திறக்கப்படவில்லை. அப்படி திறக்கப்படாத காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள் முழுமையும் பட்டினி கிடக்கக்கூடிய ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதோடு கூட அந்த மில்லின் ஒரு பகுதியை புவனகிரிக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அது தொழில் கோர்ட்டு மூலம் மாற்றக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு, இப்போது மீண்டும் மாற்றுவதற்கான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. இப்படி தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கக்கூடிய இந்த ஆலையைத் திறப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

**திரு. அ. செல்வராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதாவது 56 வது விதியின் கீழ் எடுக்கப்படுகிற ஒரு பொருள் அல்ல. அந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர அனுமதிக்கிறேன். ஆகவே முன் வரிசையில் இருக்கின்ற திரு. தம்புசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. செல்வராசன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு முன் உரிமை கொடுத்தேன். ஆகவேதான் அவர் பேசுகிறார். உங்களுக்கு அதனுடைய பதில் வர வேண்டும். அவ்வளவுதானே.

**திரு. இளம்வழுதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் வேலை பார்க்கின்றவர்கள், அந்த மூடப்பட்ட தொழிற்சாலையின் தொழிலாளர்கள் பெருமளவுக்கு என்னுடைய தொகுதி. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இல்லை. அந்த மாதிரி அல்ல; அந்த மாதிரி என்றால் திரு. ரங்கநாதன் இருக்கிறார். திரு. ரங்கநாதன் அந்தத் தொகுதி என்று கேட்கிறார். அது சொல்ல முடியாது.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை 56-வது விதியின் கீழ் எடுக்கவில்லை. ஒரு சிறப்பு கவன ஈர்ப்பு போல நம்முடைய விதிக்கு அப்பாற்பட்டு, பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி அது என்ன பிரச்சினை என்று சொல்வதற்குத்தான் அனுமதித்து இருக்கிறேன். அதற்குப் பதில் வரும். பதிலுக்குப் பிறகு நீங்கள் வேறு ஏதாவது சொல்லலாம்.

**திரு. இளம்வழுதி :** பேரவைத் தலைவர் அவர்களே ——

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே அந்த மாதிரி அனுமதிப்பதற்கில்லை. நான் அனுமதித்தால்தான் பேசவேண்டும். உட்காருங்கள். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள் என்ற செய்தியை அவைக்கு சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரம்பூரில் உள்ள பி. அண்டு சி., ஆலை 1—4—1991 முதல் இயங்காமல் இருந்து வருகிறது. 8 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்ட இந்த ஆலையை மூடுவதற்கு அனுமதி கோரி நிர்வாகம் தொழிலாளர் தகராறு சட்டப் பிரிவு 25-ஓ-ன் கீழ் விண்ணப்பம் செய்திருந்தது. இந்த ஆலையை மூட அனுமதி மறுத்து தொழிலாளர் ஆணையர் 8—2—1991-ல் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஆணை பிறப்பித்தார். இதன்பின், நிர்வாகம் ஆலையை 1—4—1991 முதல் மூடியது. ஆலையை மூடியதை எதிர்த்து, மெட்ராஸ் லேபர் யூனியன் மற்றும் பி. அண்டு சி. ஸ்டாப் யூனியன் ஆகிய இரு தொழிற் சங்கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் மற்றும் மேல் முறையீடுகளை தாக்கல் செய்தன.

மில்லின் துணி பதப்படுத்தும் பிரிவை தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள புவனகிரிக்கு மாற்றவேண்டும் என நிர்வாகம் கோருகிறது. தொழில் சங்கமோ இந்த பதப்படுத்தும் பிரிவை சென்னையிலேயே தொடர்ந்து நடக்கவேண்டுமென கோரியுள்ளது. இவ்வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம்,



சென்னை தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து, 8—1—1992-ல் பிறப்பித்த உத்தரவை தள்ளி வைத்து, நிர்வாகத்தினர் ஆலையை மூட அனுமதி கோரி விண்ணப்பித்த மனுவின் மீது மறுபடியும் விசாரணை செய்து புதிதாக ஆணை பிறப்பிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அவ்வாணைக்கு இணங்க தொழிலாளர் தகராறு சட்டப்பிரிவு 25-ஓ-ன் கீழ் விசாரித்த தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து 22—11—1991-ல் புதிதாக ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்கள். அதே ஆணையில் ஆலையின் துணி பதப்படுத்தும் பிரிவை நிர்வாகம் புவனகிரிக்கு மாற்றலாம் எனவும் ஆணையர் அனுமதி அளித்திருந்தார். தொழிலாளர் ஆணையர் பிறப்பித்த இந்த ஆணையை எதிர்த்து நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் மறு ஆய்வு மனுக்களை அரசுக்கு சமர்ப்பித்தன. இந்த மறு ஆய்வு மனுக்கள் மீது தொழிலாளர் துறைச் செயலாளர் இரு தரப்பார்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளித்து விசாரணை நடத்தினார். இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதியையும் இது சம்பந்தமாக தொழிலாளர் நல செயலாளர் விசாரணை செய்து முடித்துள்ளார். இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 4—2—1992 அன்று நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

## 2. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த submission -ஐ நீங்கள் என்னிடம் முன்பே கேட்டிருக்க வேண்டும். என்ன Submission என்று எனக்குத் தெரியாத நிலையிலே. . .

THIRU S. PETER ALPHONSE : I wanted to draw your attention. That is all. I do not want any reply from any Ministers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நீங்கள் கேட்டிருந்தால் நான் அனுமதிக்கலாம் (குறுக்கீடு). எந்த விதியின்கீழ் இதை கிளப்ப முடியும்? சில முக்கியமான பிரச்சினைகள் பற்றி நான் கிளப்புவதற்கு சில நேரங்களில் அனுமதிக்கிறேன் (குறுக்கீடு) இது எப்படி Submission under which rule can you submit to me at this stage? வரும்? நீங்கள் இதிலே Submission எந்த விதியில் கேட்க முடியும்?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதற்குதான் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Zero-hour- என்கிறதால்தான் இந்தமாதிரி சில முக்கியமான பிரச்சினைகளை கிளப்ப வேண்டுமென்று கேட்கிறார்கள். கேட்டவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் எதுவுமே இல்லாமல்.... (குறுக்கீடு) அதை நீங்கள் என்னிடத்தில் வந்து சொல்லியிருந்தால்தானே முடியும்?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் முக்கிய அலுவல் காரணமாகச் செல்வதால் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

1. தமிழ்நாடு அரசின் 1961-62, 1962-63, 1964-65, 1965-66, 1967-68 முதல் 1971-72 வரையிலான ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில்





(சிவில்) வேளாண்மைத் துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் தொடர்புடைய அறிக்கைகளிலும், நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யிலும், இருபத்தைந்தாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யிலும் மற்றும் முப்பத்தொன்பதாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யிலும் தொடர்புடைய பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தி நான்காவது அறிக்கையை அளிக்கின்றேன்.

2. 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

3. தமிழக அரசின் கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கையை சபைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[1992 ஜனவரி 31

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம், திருமதி கே. பஞ்சவர்ணம்.

**திரு. இளம்வழுதி:** தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே (குறுக்கீடு) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறுகிற தீர்மானம். இதிலே இதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஒவ்வொருவரும் பேச வேண்டும். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேச வேண்டும்.

**திரு. இளம்வழுதி:** நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானம், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகிறபோது எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்பது மரபாகும்.

**திரு. இளம்வழுதி:** Special Mention என்று அனுமதித்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் முதலிலேயே சொன்னேன். Special Mention என்பது முக்கியமான பிரச்சினை. அது என்ன பிரச்சினை என்பதைச் சொல்லி, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இப்போது அனுமதித்தேனே தவிர, இதையே அனுமதிக்க வேண்டாம் என்று சொல்கிறீர்களா, அப்படி என்றால், உட்காருங்கள். விவாதம் தொடங்குகிறது . . . (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி கே. பஞ்சவர்ணம்,

**திருமதி கே. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு மிக்க இந்தப் பேரவையின் பொறுப்பாக . . . (குறுக்கீடு).



1992 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். என்னுடைய அனுமதி இல்லாமல் பேசுவது முறை அல்ல. (குறுக்கீடு) திரு. செல்வராஜுக்கு நான் அனுமதி கொடுத்தேன். ஆனால் அவர் பேசவில்லை. எனவே, கட்சித் தலைவர்கள் வரிசையில் உள்ள இன்னொருவரைப் பேச அனுமதித்தேன். (குறுக்கீடு) நீங்கள் இப்படி என்னுடைய வேண்டுகோளையும் மீறி நின்று பேசிக்கொண்டிருப்பது முறை அல்ல (குறுக்கீடு). இதிலே பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. உட்காருங்கள். திரு. இளம்வழுதி உட்கார வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அவருடைய தொகுதி என்பதால் அவர் பேச வேண்டும் என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, அவர் தொகுதி அல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் தவறாகப் பேசுகிறீர்கள் என்று அர்த்தம். உட்காருங்கள். அவையை நீங்கள் மிஸ்லீட் பண்ணக்கூடாது. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தலைவர்கள் வரிசையில் ஒருவர் பேசட்டும் என்று சொன்னேன். அவர் பேசாமல் இருக்கிறார்.

பிற்பகல் 4-50

**திருமதி கே. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு மிக்க பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசக்கூடிய வாய்ப்பை இந்த அவையிலே நான் பெறக்கூடிய வகையிலே என்னை வலங்கைமான் சட்டமன்றத் தொகுதியிலே அறிமுகப்படுத்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இன்றைக்கு அளித்திருக்கக்கூடிய இந்தச் சிறப்பான உரையில், தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற ஆட்சியில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதை இந்த உலகு அறியக்கூடிய வகையில் ஒரு சிறப்பு மிக்க உரையாக வைத்திருக்கிறார்கள்.

[திருமதி கே. பஞ்சவர்ணம்] [1992 ஜனவரி 31

இந்த உரை இந்தத் தமிழ் நாடு மட்டுமல்ல, இந்திய நாடே மிகப் பெரிய அளவில் பாராட்டக்கூடிய வகையில் இருக்கிறது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசு, அதுவும் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாய்மார்கள், குழந்தைகள், விவசாயிகள், தொழிலாளர்கள், பல்வேறு பகுதி இனத்தைச் சேர்ந்தவர்கள் பலன் அடையக்கூடிய வகையில் மிகக் குறுகிய காலத்தில் அரிய பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே விளக்கமாக, தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இதற்காக என்னுடைய மகத்தான பாராட்டுதல்களை ஆளுநர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றுவரை தமிழக வரலாற்றில் இந்த அளவுக்கு ஒரு சிறப்பு வாய்ந்த ஆளுநர் உரை அமைந்ததில்லை என்ற ஒரு பெருமிதம் ஏற்படுகிறது. ஏனென்றால் தமிழகத்தினுடைய அமைச்சரவை, அதிலும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு எந்த அளவுக்கு விடுதலைப் புலிகள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை ஆளுநர் அவர்கள் உரை எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்த நாட்டை சின்னாபின்னமாக சீரழித்துக்கொண்டிருந்த, இந்த நாட்டில் கொடுங்கோன்மை ஆட்சி புரிந்த, இந்த நாட்டை வெளி நாடுகளுக்குக் காட்டிக்கொடுக்கக்கூடிய வகையில் தேச விரோதச் செயல்களை நடத்திக் கொண்டிருந்த, ஒரு பெரிய சுய சாம்ராஜ்யம் நடத்திக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளை எடுத்த எடுப்பிலேயே வெளியேற்றியதை ஆளுநர் அவர்கள் உரையிலே சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். இந்தத் தமிழக மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே, இந்தத் தமிழக மக்களை வளர்க்கக் கூடிய வகையிலே, அந்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையிலே, தமிழ் இனம் தலை நிமிர்ந்து நடக்கக்கூடிய வகையிலே, விடுதலைப் புலிகளை வெளியேற்றியதை ஆளுநர் அவர்கள் உரையில் மிகவும் பாராட்டி இருப்பதற்கு நான் மனமார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த வகையிலும் வெளியிலே நடமாட முடியாத, பெண்கள் வெளியிலே வர முடியாத அளவுக்கு ஒரு கொடுங்கோன்மை ஆட்சி நடந்ததை நாம் அனைவரும் அறிவோம். அதிலிருந்து விடுவித்தது மட்டுமல்லாமல், தமிழகத்தில் பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருப்ப



1992 ஜனவரி 31] [திருமதி கே. பஞ்சவர்ணம்]

தற்குக் காரணமாக இருந்த மலிவு விலை மதுக் கடைகளை புரட்சித் தலைவி அவர்கள் அரசு எந்த அளவுக்கு நட்டப்பட்டாலும் பரவாயில்லை என்று, மூடியிருக்கிறது. அந்தப் பெண்களுடைய கண்ணீர் துடைக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் வேலை செய்வதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு அவர்கள் ஜீவனம் பண்ணுவதற்குக்கூட வழியற்ற நிலை இருந்ததை எண்ணி, குடித்துவிட்டு செலவழிந்ததை தடுத்து நிறுத்திய காரணத்தால் இன்றைக்கு அந்தப் பெண்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள், மிகப் பெருமிதத்தோடு வெளி நடக்கிறார்கள், அவர்களுடைய பூரிப்புக்கு எல்லையே இல்லை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மகத்தான சாதனைகள் செய்திருப்பதை ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லியிருப்பதற்காக நான் பெரிதும் மனமார ஆளுநர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-55

மேலும் பெண்கள் வளர்ச்சிக்காக, பெண்கள் முன்னேற்றத்திற்காக, பல்வேறு தொழில் துறையிலே அவர்களை ஈடுபடுத்துவதற்காக பெண்கள் கூட்டுறவுத் தொழில் துறையில் தொடங்குவதற்கு, தனித்தனி சங்க அமைப்புகளை அமைப்பதற்கு, மில்க் சொசைட்டிகளும், பல்வேறு கைத்தொழில்களும் கற்றுக்கொள்வதற்கும், பல்வேறு வகையில் பெண்கள் முன்னேறுவதற்கான திட்டங்களை இந்த அறிக்கையில் அறிவித்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அப்படிப்பட்ட மகத்தான ஒரு ஆட்சி தான் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆட்சியாகும். அப்படிப்பட்ட இந்த நேரத்தில் வறட்சியை மையமாக வைத்திருந்த தஞ்சை மாவட்டம்--கடந்த பத்தாண்டுக் காலம் விளைச்சல் இல்லாமல், வறுமையில் சிக்கியிருந்த அந்த தஞ்சை மாவட்டத்திற்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் பொன்மனத் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, அவர்கள் விடா முயற்சியாக காவிரி திட்டத்தை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாகவும், இயற்கையின் சாதகமான சூழ்நிலையாலும், அவர்களின் ஒரு நல்ல, ஒரு செழிப்புமிக்க, தெய்வீக உணர்வுக்கு ஏற்ற வகையிலும் இந்த முறையில் காவிரி

[திருமதி கே. பஞ்சவர்ணம்] [1992 ஜனவரி 31

ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து, தண்ணீர் வந்தது மட்டுமல்ல, 10 ஆண்டுக் காலம் எங்களுடைய மாவட்டத்தில் பதினெட்டாம் பெருக்கு விழாவே கும்பிடாத நிலை இருந்ததை மாற்றிய அந்தத் தாய் உள்ளத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்கள் எல்லோரும் மஞ்சள் குங்குமத்துடன், பூவோடும் பொட்டோடும் இந்த ஆண்டு பதினெட்டாம் பெருக்கு விழாவைக் கொண்டாடும் வகையில் மகத்தான சாதனை புரிந்த புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு காவிரி நீர்ப் பிரச்சினையிலும் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து வந்திருக்கும் அந்தத் தமிழ் மக்கள் எந்த அளவுக்கு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் காண்கிறோம்.

நீண்டநாள் பிரச்சினையாக இருக்கக்கூடிய அந்த காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, கர்நாடக மாநிலத்தோடும், தமிழ் மாநிலத்தோடும் பேசி, நல்ல தீர்வைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, இன்றைக்கு மத்திய அரசு அதில் அக்கறை செலுத்தாமல், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைக்கூட ஏற்றுக் கொள்ளாமல், இன்றைக்கு ஒருதலைப்பட்சமாக இருப்பதாக நான் கருதுகிறேன். மத்திய அரசு உடனடியாக தமிழகத்தின் நலனைப் பாதுகாக்கவும், குறிப்பாக காவிரி நீர்ப் பகுதியைச் சேர்ந்த மக்களைப் பாதுகாக்கவும், தஞ்சை மாவட்டத்தின் நலனைப் பாதுகாக்கும் வகையிலும் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோழ வள நாடு சோறுடைத்து என்று சொல்லக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் அந்த மாவட்டத்தில், காவிரி நீரை மட்டுமே நம்பியிருக்கக் கூடிய தஞ்சை மாவட்டத்தில், அந்த மக்களுக்கு நல்ல வாழ்வு அளிக்கக்கூடிய வகையில், மத்திய அரசு காவிரி நீர்ப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, முறையாகத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நமது மாநில அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து இருக்கும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1992 ஜனவரி 31] [திருமதி கே. பஞ்சவர்ணம்]

மேலும் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு பஸ் கட்டணத்தை உயர்த்தினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். பஸ் கட்டணத்தை உயர்த்தியது புரட்சித் தலைவி அரசு அல்ல. இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியிருந்தபோதிலும், அரிசி விலையை உயர்த்தக்கூடாது என்று, பல்வேறு பொருளாதார நெருக்கடி இருந்தும்கூட, அதை உயர்த்தாத வகையில் இன்றைக்கு வழி நடத்திச் செல்லக் கூடியவர்கள் எங்கள் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். மத்திய அரசு முறையாக, வழக்கமாக மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடிய பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரூபாய் 120 கோடி என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய தொகை. அந்த 120 கோடி ரூபாயை இன்றைக்கு மத்திய அரசு நமக்கு வழங்கவேண்டும். எந்த வகையிலும் குறைவாக எடுத்துக் கொண்டாலும், இந்த அரசுக்கு கெட்ட பெயரை விளைவிக்கலாம் என்ற ஒரு நோக்கம் கொண்டதாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே மத்திய அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் மகத்தான ஆதரவைக் கொடுக்கக்கூடிய அரசாக நாம் இருக்கிறோம். இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இருந்த காலத்திலிருந்து, இந்தியாவிலேயே ஒரு மாநிலம் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு ஆதரவாக இருக்கிறது என்று சொன்னால், அது தமிழ்நாடுதான், அதிலே இருந்த புரட்சித் தலைவரின் அரசுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல புரட்சித் தலைவி அவர்களும், புரட்சித் தலைவரின் கொள்கையில், புரட்சித் தலைவரின் வழியில், அவருடைய கொள்கையைப் பின்பற்றி புரட்சித் தலைவருடைய மறு பிறவியாக இருக்கக்கூடிய எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான் இன்றைக்கும் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். அவர்கள் ஆட்சி செய்யக்கூடிய மாநிலங்கள் கூட உதவியாக இல்லை என்றாலுங்கூட, எங்களுடைய அரசு, எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆதரவாக இருக்கக் கூடிய இந்த நேரத்தில், மத்திய அரசு பேருதவியாக இருந்து

[திருமதி கே. பஞ்சவர்ணம்] [1992 ஜனவரி 31

மத்திய அரசு ஒதுக்கீடு செய்யக்கூடிய அத்தனையையும் முழுமையாக தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த இந்த அறிக்கையை நான் மனதார பாராட்டி, என்றென்றும் இந்த அமைச்சரவையில் எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியே நிரந்தர முதலமைச்சர் என்பதை இந்த நேரத்திலே அவர்களுக்குச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 5-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். பன்னீர்செல்வம்.

**திரு. என். பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அருகில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் என்னுடைய தொகுதி இருக்கிறது. அங்கு நடைபெறவிருக்கிற மகாமகம் திருவிழாவிற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், சக அமைச்சர்களும், என்னுடைய சட்டமன்ற சக அன்புள்ளம் கொண்ட சகோதரர்களும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியுள்ளார்கள். போராளிகள், தீவிரவாதிகளின் நடவடிக்கையைப்பற்றி உரையாற்றிய ஆளுநர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

காவிரி தண்ணீர் தாவாவில் மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டதுபோல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உறுதியளித்த கவர்னர் உரையின் உணர்வுகள், தமிழக மக்களை பாதுகாக்கின்ற வகையில் அவருடைய உணர்வு அந்த உரைக்கு மேன்மேலும் நெறி கட்டுகிறது. அதே நேரத்தில் கர்நாடகாவில் ஏற்பட்ட வன்முறையை, தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதை கவர்னர் அவர்கள் சுட்டிக் காண்பித்தது, தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கைக்குப் பாராட்டுத் தெரிவித்திருப்பது, மத்திய அரசு இழப்பீடு வழங்குமாறும், கர்நாடக அரசு மீது உறுதியான நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருப்பது ஆகியவை கவர்னர் உரையின் முக்கிய அம்சங்களாகும்.



1992 ஜனவரி 31] [திரு. என். பன்னீர்செல்வம்]

மாநிலத்திற்கு எப்படி நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதோ அதேபோல மத்திய அரசிலும் நிதிப் பற்றாக்குறை இருப்பதால் அதை மாநில அரசு அனுசரித்துப் போக வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (பலத்த சிரிப்பு).

*** மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மன்னிக்க வேண்டும். மத்திய அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருக்கிறது, அதனால் மாநில அரசு தான் அனுசரித்துப் போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். மத்திய அரசுக்கு நிதி நெருக்கடி இருப்பது உண்மைதான். அந்த நிதி நெருக்கடியை அனுசரித்து எல்லா மாநில அரசுகளும் போக வேண்டும் என்று மத்திய அரசு எதிர்பார்த்தால் அதில் நியாயம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 1991-92-க்கான ஆண்டு ஒதுக்கீடு தமிழ்நாட்டிற்கு ரூ. 1605 கோடியாக இருந்தது. 1992-93-க்கான ஆண்டு ஒதுக்கீட்டை ரூ. 1486 கோடி என்று ரூ. 119 கோடியைக் குறைத்திருக்கிறார்கள். அதே சமயம் கர்நாடக மாநில அரசுக்கு 1991-92-க்கான ஆண்டு ஒதுக்கீடு ரூ. 1500 கோடியாக இருந்தது. 1992-93-க்கான ஆண்டு ஒதுக்கீட்டுக்கு மேலும் ரூ. 310 கோடியைதான் கர்நாடக மாநில அரசே கோரியது. அவர்கள் ரூ. 1810 கோடி இருந்தால் போதும் என்று கேட்டார்கள். ஆனால் அதற்கும் மேலே போய் மத்திய திட்டக் குழுவே கர்நாடக அரசுக்கு, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டுக்கு மேலும் ரூ. 415 கோடியை அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. அதாவது கர்நாடக மாநில அரசு கடந்த ஆண்டை விட ரூ. 310 கோடி மேலும் வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் திட்டக் குழுவே அவர்களுக்கு ரூ. 415 கோடி அதிகமாகக் கொடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் மத்திய அரசாங்கம், தமிழக அரசின் ஆண்டு ஒதுக்கீட்டைக் குறைத்திருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 5-05 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நமக்கு இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டு இருப்பதைச் சொன்னார்கள். இந்தத் திட்ட ஒதுக்கீடு இறுதியானதல்ல என்று சென்னைக்கு வந்து இருந்தபோது திட்டக் கமிஷன் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் தெளிவாக அறிவித்து இருக்கிறார்கள். தமிழக அரசு திட்டக் குழுவுடன் தொடர்பு கொண்டிருக்கிறது; நாங்களும் மீண்டும் தொடர்பு கொண்டிருக்கிறோம். இந்தத் தொகை நிச்சயமாக அதிகரிக்கப்படும் என்று உறுதிமொழியாகத் தந்து இருக்கிறார்கள்.

நான் அறிந்தவரையில், நமக்குத் தொகை குறைத்ததற்கான காரணம் ஒன்று கூறப்படுகிறது. சென்ற ஆண்டுகளில் நமக்கு—இந்த அரசு அல்ல, நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையினை முழுமையாக நாம் பயன்படுத்திக்கொள்ளாமல் இறுதிவரை வைத்து இருந்து, அந்த நிதியைத் திருப்பிக் கொடுத்துவிட்டோம் என்கிற குற்றச்சாட்டு நம் மீது இருக்கிறது. நான் இந்த அரசைக் குறை சொல்லவில்லை. இதற்கு முந்தைய அரசு செய்து இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவேதான் இந்த ஆண்டு நமக்கு திட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டு இருக்கிறது என்று திட்டக் கமிஷன் சார்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. என்றாலும், நமக்கு அதிக நிதி வேண்டுமென்று கேட்பதில் நியாயம் இருக்கிறது; அதிக நிதி கிடைக்கும். 'நிச்சயமாகக் கொடுப்போம்' என்று திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே நிச்சயமாக நமக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையின் நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்கள் தெரிவித்ததன் பேரில் ஒரு விளக்கம் கூற வேண்டியது என்னுடைய கடமையாகிறது.



1991-92-க்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 1,605 கோடி ரூபாய், அதை முழுவதுமாக செலவு செய்யவில்லை; நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்வது தவறு. அதை முழுமையாக இந்த ஆண்டு முடிவதற்குள் நம்மால் நிறைவேற்றிக் காட்ட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, additional resource mobilisation -ஐ, மேலும் வருவாயைப் பெருக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தயங்காமல் துணிவோடு மேற்கொண்டு உள்ளது. இதனால் மக்கள் மத்தியில், பொதுமக்கள் மத்தியில் ஓரளவுக்கு அதிருப்தி ஏற்பட்டாலும் கூட பரவாயில்லை. தமிழகத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற மிக நெருக்கடியான நிதி நிலையிலிருந்து இந்த மாநிலத்தை மீட்டுக் கொண்டுவர வேண்டும் என்ற உந்துதலோடு, அந்த எண்ணத்தோடு சில tough decisions கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

எனவே, இப்போது நான் ஏற்கெனவே மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவருக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். அந்த விவரத்தை இந்த அவைக்கும் தெரிவிப்பது என் கடமை என்று கருதுகிறேன். மத்திய திட்டக் குழு இப்போது கூறி உள்ள, ஒதுக்கி உள்ள 1,486 கோடிக்கு மேல் இந்த அரசின் சொந்த முயற்சிகளால் மேலும் additional resource mobilisation செய்து, எங்கள் சொந்த முயற்சிகளாலேயே 1992-93-க்கு 1,651 கோடி வரைக்கும் செய்ய முடியும். எனவே அதற்கு மேல் after all ஒரு நூறு கோடி ரூபாய், அதை மட்டும் மத்திய அரசு மேலும் ஒதுக்கித் தந்தால் 1992-93-க்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை 1,751 கோடியாக அறிவிக்க வேண்டும் என்று கோரி உள்ளோம். இந்த நூறு கோடி ரூபாய் அதிகமாக மத்திய அரசு கொடுக்காவிட்டாலும் கூட, எங்களாலேயே 1,651 கோடி ரூபாய் வரைக்கும் செய்ய முடியும்; (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. என். பன்னீர்செல்வம். (குறுக்கீடு) அவர் பேசட்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசி விட்டார்.

[1992 ஜனவரி 31

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேசமயத்தில் எங்கள் கோரிக்கையை மத்திய அரசு பரிவுடன் பரிசீலிக்கும், எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் நம்மிடையே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல், நிச்சயமாக மத்திய அரசும் திட்டக் குழுவும் நம்முடைய கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து உரிய, நாம் கேட்ட தொகையைத் தருவார்கள் என்று நானும் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி.** திரு. என். பன்னீர்செல்வம்.

**திரு. என். பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு வரவேண்டிய தொகை எதுவாக இருந்தாலும் நானும் நிச்சயமாக நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகி, மிகவும் கடுமையான முறையிலே இது போன்ற ஒரு விவாதத்தை விமர்சித்து வேண்டியவைகளை நிச்சயமாகச் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரொம்ப நன்று.

பிற்பகல் 5-10

**திரு. என். பன்னீர்செல்வம் :** நடப்பாண்டில் புயல், பெருமழை, வெள்ளம் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை அகற்ற விரைந்து செயல்பட்ட தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். அதற்குண்டான தொகையை மத்திய அரசு வழங்குமாறு கேட்டுள்ளது கவர்னர் உரையில் பாராட்டத்தக்கது. விவசாயம், மீன் பண்ணை, காடு வளர்ப்புத் திட்டம், அன்னியச் செலாவணி, வேலை வாய்ப்பு, தொழில் கொள்கை ஆகியவற்றுக்கு தமிழக அரசு எடுத்துள்ள திட்டங்கள் குறித்து கவர்னர் உரையில் தெரிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. சாலைப்



1992 ஜனவரி 31] [திரு. என். பன்னீர்செல்வம்]

பராமரிப்பு, மின் உற்பத்தி, பேருந்துகள் அதிகப்படுத்துதல், கிராம, நகரங்களுக்கு குடிநீர் வசதி, மருத்துவப் பணிகள் பள்ளிக் கட்டடங்கள், இலவச மருத்துவ முகாம், சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் பாராட்டிற்குரியவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து இந்த ஆட்சியை அமைத்து இருக்கிறோம். நமக்குள்ளே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிற ஒரு விதத்தைப் பார்க்கும்பொழுது எனக்கு மனதிலே மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டது அந்த அடிப்படையில் சில எண்ணங்களை வெளியிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பன்னீர்செல்வம், இப்போது நடைபெற்றுக்கொண்டிருப்பது ஆளுநர் உரை மீதான விவாதம். நீங்கள் வேறு ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அவையில் ஆளுநர் உரையின் மீது விவாதம் நடக்கிறது. அதிலே நீங்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டியதில்லை.

**திரு. என். பன்னீர்செல்வம் :** தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் மறைவிற்குப் பின்பு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிரிந்து, தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் தனியாகப் போட்டியிட்டு, புரட்சித் தலைவி அவர்கள் 28 இடங்களையும், காங்கிரஸ் 26 இடங்களையும் பெற்று தோல்வி அடைந்தோம். அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் உத்தரவின் பேரில் தானைத்தலைவர் வாழப்பாடியார் அயராது உழைத்ததன் அடிப்படையில், புரட்சித் தலைவி அவர்களின்கீழ் அமைந்துள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்து போட்டியிட்டதில் இப்போது நமது தமிழக முதல்வராக மாண்புமிகு தலைவி அவர்கள் இங்கு நம் முன்னால் அமர்ந்து இருக்கிறார்கள். இங்க காங்கிரஸ் தலைவர்கள், புறாச் சின்னத்தில் போட்டியிட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனோ, அல்லது தி.மு.க வோடோ கூட்டு சேர நினைக்கவில்லை. தமிழகத்தின் சிங்கங்களான வாழப்பாடியார், புரட்சித் தலைவி ஆகியோர்கள், மத்தியிலும் மாநிலத்திலும்

[திரு. என். பன்னீர்செல்வம்] [1992 ஜனவரி 31

எண்ணத்தைக் கொண்டவர்கள், நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய எந்த நேரத்திலும் எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என் தொகுதியிலும், பொதுவாகக் கடன் கொடுப்பது, வேலைகள் நடைபெறுவது போன்றவற்றில், பல பெரும் குழப்பங்கள், தாங்க முடியாத அரசியல் தலையீடு, தமிழ்நாடு முழுவதிலும் வீடு வீடாக பெரிய அளவிலே காட்டுத் தீ போல பரவி வருகிறது. என் தொகுதியில் அரசியல் தலையீடு காரணமாக ஊழல் ஏற்பட்டு, தவறு செய்யாத தாசில்தார் திரு. ராமகிருஷ்ணன் தவறு செய்த ஆர்.ஐ.வி.ஏ.ஓ. போன்றவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்கள். அவைகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புயலால் வீடு இழந்தோர்களுக்கு என் தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு பணம் கொடுக்கப்பட்டும், மீதம் உள்ளவர்களுக்கு இது வரையில் பணம் கொடுக்கப்படவில்லை. தமிழர் திருநாளான பொங்கல் அன்று கொடுக்கப்பட்ட இலவச வேட்டி, சேலைகளும் அதே நிலையில்தான் இருக்கின்றன. இலவச மருத்துவ சிகிச்சைக்கு மருந்துகள் அதிகம் கொடுக்கப்படவேண்டும். என் தொகுதியில் உள்ள திருப்பனந்தாள் யூனியனில், மின் விளக்கு போடுவதற்கு அரசால் பணம் கொடுக்கப்பட்டும், பணம் வந்து சேரவில்லை என்கிறார்கள். இது அதிகாரிகளின் தவறான கருத்து என்று நான் அறிகிறேன்.

காங்கிரஸ், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது திரு. ராஜீவ் காந்தி மறையும்போது நீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்குகளை இதுவரையில் வாபஸ் பெறவில்லை. 50 ஆயிரம் டன் நெல் கொள்முதலை தமிழக அரசு அதிகாரிகளே கொள்முதல் செய்து, இந்திய உணவுக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற அதனுடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மதுவிலக்கு முழு அளவில் இல்லை. சாராயம், கள் மட்டுமே மதுவாகக் கருதப்படுகிறது. பிராந்தி, விஸ்கி போன்றவைகள் எந்த மதுவகையைச் சேர்ந்தது என்று பார்க்க



1992 ஜனவரி 31] [திரு. என். பன்னீர்செல்வம்]

வேண்டும். எனவே மதுக் கொள்கையை மறுபரிசிலனை செய்து, மக்களுக்கு சலுகைகளைச் செய்கின்ற அளவிற்கு மதுக் கொள்கையைப் பயன்படுத்தவேண்டும்.

மத்திய அரசுக்கு நாட்டிலே எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது, மதுக் கொள்கை பற்றி ஒரு சட்டத்தை எப்படி இயற்ற முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கடைசியாக ஒரு வேண்டுகோள். என் தொகுதியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்த அரசால் கேட்கப்படுகின்ற அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே, உடனடியாக ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைக்க ஒரு சிறிய உத்தரவை, தங்கள் பொற்கரங்களால் ஆணையிடவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன். வாழ்க ஒற்றுமை, நன்றி, வணக்கம், ஜெய் ஹிந்த்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் வெ. சரோஜா.

**டாக்டர் (திருமதி) வெ. சரோஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்தோர் பலரை வென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் மாண்புமிகு திறம்பட்ட அமைச்சர் பெருமக்கள் பங்கு எடுத்துக்கொண்ட இந்த சிறப்புமிக்க பத்தாவது சட்ட மன்றத்தில், நாம் பதவி ஏற்று ஏறத்தாழ 7 மாத காலத்திற்குள் தமிழக அரசு என்ன, என்ன செய்தது என்பதை மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் ஆணித்தரமாக, அழுத்தந்திருத்தமாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அத்தனை சிறப்புகளையும் ஒரு சிறிய புத்தகத்தில் அடக்கிய மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சாதனைப் பட்டியலைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் 3 நிமிடங்கள் போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் கொடுத்து இருக்கிறேன். (சிரிப்பு).

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா: நேரத்தின் அருமை கருதி மற்றோருக்கும் வழிவிட்டு, நான் சொல்லவேண்டியவைகளை 3 நிமிடத்தில் முடித்துக்கொள்ள நான் விழைகிறேன். (சிரிப்பு). மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், பதவி ஏற்றவுடன் அவர்கள் இயற்றிய முதல் சட்டம், மலிவு விலை மதுக் கடைகளை ஒழிப்பதுதான். அதை ஒழிப்பதன் மூலம் நமக்கு ஏற்பட்ட நிதி நிலை நெருக்கடி 325 கோடி ரூபாய்.

பிற்பகல் 5-20

அடுத்து, நமக்கு இயற்கையின் சீற்றத்தால் பயிர்களுடைய அழிவு மற்றும் நாம் மக்களுக்குக் கொடுத்த உதவி ரூ. 400 கோடி. அடுத்து கர்நாடக தமிழர்களுடைய உயிர்களைக் காக்க, உடைமைகளைக் காக்க நாம் எடுத்துக்கொண்ட முயற்சி ஆக ஏறத்தாழ ரூ. 1000 கோடி நமக்கு நிதிநிலையில் பற்றாக்குறை வந்தாலும் நாம் எடுத்துக்கொண்ட சாதனைகள், தேர்தலின்போது நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் நாம் சிறிதும் பின்தங்கவில்லை. அதற்கு உதாரணமாக, வரப்பிரசாதமாக, இதற்கு முன்பு எந்த முதல்வருமே சாதிக்க முடியாத, தமிழக மக்களுக்கு மருத்துவ புரட்சி கண்ட மாதருள் மாணிக்கமாக நம்மிடையே அமர்ந்திருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனை உலகம் போற்றும் சாதனையாகும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு தன்னுடைய கெசட்டில் 205 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதை அறிவித்து இருந்தாலும், இன்றுவரை அதைச் செயல்படுத்தவில்லை. 'என்று செயல்படுத்தும்' என்று ஆவலோடு நாம் அனைவரும் காத்துக்கொண்டு உள்ளோம். அதை விரைவில் மத்திய அரசு செயல்படுத்தவேண்டுமென்று இந்த சட்டமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற கூற்றுக்கு இணங்க அந்தச் செயலாக்கி, அரக்கர்களை அடக்கி, முன்பிருந்த ஆணவக்காரர்களுக்கு அரசு என்பது என்ன, அதனுடைய கடமை என்பது என்ன என்பதை பொறுப்பேற்ற ஆறு மாதங்களிலேயே நாம் [illegible] காட்டியிருக்கிறோம் என்பதை தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.





கிருஷ்ணா நதித் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் 1995 ஆம் ஆண்டுக்குள் நம்முடைய சென்னையில் கிருஷ்ணா நதி தண்ணீர் கொண்டு வரப்படும் என்ற தொலைநோக்கு பார்வை கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய கரங்களை வலுப்பட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து செயல்படுவோம். எவ்வளவு பற்றாக்குறை வந்தாலும் ஏழைகளின் இதய தெய்வமாக தாழ்த்தப்பட்ட மக்களின், பிற்படுத்தப்பட்ட மக்களின் இதயங்களில் சதா இயங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 41.56 கோடி செலவில் ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வேஷ்டி, சேலை வழங்கி அனைத்து தமிழக மக்களுடைய இதயங்களில் இடம் பெற்றுவிட்ட நம்முடைய நிரந்தர முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நாம் எடுத்துக்கொண்ட அனைத்துப் பணிகளும் சிறக்க ஆளுநர் உரைக்கு நாம் நன்றி தெரிவிக்கும் வண்ணம் பணிகள் சிறக்க வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் உலக நாடுகளில் தமிழ்நாட்டை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும் தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் கொள்கைகளை, மக்களை வளப்படுத்தும் திட்டங்களை அறிவிக்கின்ற மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும் வாய்ப்பினை பெற்றமைக்காக பேரணாம்பட்டு தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த முதல்வர் ஆட்சிக் காலத்திலும் ஏற்படாத கடுமையான நிதி நெருக்கடி இருக்கும் இந்தக் காலக் கட்டத்தில் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற தமிழக முதல்வர், தமிழகத்தின் காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்ற உண்மை நன்கு தெரிகிறது.

[டாக்டர் ஜெ. பரந்தாமன்] [1992 ஜனவரி 31

நல்லவர்கள் நாடு ஆண்டால் நாட்டு மக்கள் நலம் பெறுவார்கள், வளம் பெறுவார்கள் என்ற உண்மைக்கேற்ப இப்போது இதய தெய்வம் ஆட்சியில் நல்ல மழை பெய்து விளைச்சல் பெருகி, மக்கள் வளம் பெறும், நலம் பெறும் ஒளிமயமான எதிர்காலம் நமக்குத் தெரிகிறது.

பிற்பகல் 5.25

இதில் கொஞ்சம் அதிகமான மழை பேரணாம்பட்டு தொகுதியில் பெய்துவிட்டால் காட்டாற்று வெள்ளம் பெருகி ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவுக்கு சேதம் உண்டாக்கி விட்டது. இதற்கு உதவிபுரிய இதய தெய்வத்தை வேண்டுகிறேன். காவிரி நீர் பெற்றுத் தந்த இதய தெய்வத்துக்கு, தமிழகம் உள்ள அளவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. வெறும் வாய்ச்சொல் வீரர்கள் பலர் இருக்கிற இந்த காலக் கட்டத்தில் காவிரிக்காக மத்திய அரசோடு அரசியல் சாணக்கியத்தோடு போராடி வாதாடி பெற்ற வெற்றி ஒரு சரித்திர சாதனை.

அதேபோல கர்நாடகத்தில் திட்டம் இட்டு தமிழர்கள் தாக்கப்பட்டபோது, அவர்களை அணைத்த தாய் பாசம், இதற்காக கஷ்டப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்த தாய் உள்ளம், முகாம்கள் அமைத்த வேகம், கர்நாடக தமிழர்களுக்காக இன்னுயிர் தந்தோர் வாரிசுதாரர்களுக்கு உடனடியாக சில மணி நேரத்திற்குள் போக்குவரத்துக் கழகத்தில் வேலை வாய்ப்பு அளித்த ராக்கெட் வேகம், மருத்துவ கல்லூரிகளில் இடம் அளித்த வேகம், இதற்கெல்லாம் தமிழக மக்கள் தமிழக காவல் தெய்வத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதிலிருந்து யார் தமிழக மக்களுக்கு உண்மையாக உதவுகிறார்கள், யார் யார் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு விட்டது.

அதேபோல கடுமையாக நிதி நெருக்கடி நிலவுகிற இந்த நாளில் ஏழைகளுக்கு ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவில் இலவச வேட்டி, சேலை வழங்கிய இதய தெய்வத்தை ஏழை மக்கள் மறக்கவே மாட்டார்கள். ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல, 1992 ...



1992 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காத்தால்தான் உரையாற்றுகிற உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்தை முழுமையாகச் சொல்ல முடியும். அதை மனத்திலே கொண்டு பேச விரும்புகிற உறுப்பினர்கள் வெளியே போய் பேசிவிட்டு வரலாம். உள்ளேயே இருந்து பேசினால் உரையாற்றுகிற உறுப்பினர்களுடைய கருத்துக்களை முழுமையாகச் சொல்ல முடியாமல் போய்விடும். எனவே அவையில் இருக்கிற உறுப்பினர்கள் முழுமையாக அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஜெ. பரந்தாமன்.

**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல 1992-க்குள் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்படும் என்ற வார்த்தை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. பேரணாம்பட்டு தொகுதியினுடைய தண்ணீர் பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டுமானால் பத்திரப்பள்ளி அணைக்கட்டு திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மோர்தானா அணைக்கட்டு திட்டத்திலிருந்து ஒரு பாசன கால்வாயை பேரணாம்பட்டு ரங்கம்பட்டி பகுதிக்கு இணைக்க கேட்டுக்கொள்கிறேன். தொகுதியிலே இருக்கிற ஏரிகள் சீரமைப்பு, கசிவு நீர் குட்டைகள், சிறு அணை போன்ற திட்டங்களை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதயேந்திரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில் கொள்கை. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டு இருப்பதை நினைக்கும்போதே மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிலையிலே மத்திய அரசும் கூட கொஞ்சம் பங்கெடுத்து பெரிய தொழிற்சாலைகளை திறக்க முன் வரவேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு தொகுதி தோல் தொழில்களுக்கு பெயர் வாய்ந்தது. அந்தத் தோல் தொழில் மூலம் மிக அதிகமான அளவுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. அதற்காக இந்தத் தோல் தொழிலை

காப்பாற்றுகிற வகையிலேயும், இந்தத் தோல் தொழிலை முன்னேற்றுகிற வகையிலேயும் வளர்ச்சி மானியங்கள் அளிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பேரணாம்பட்டு தொகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் இல்லை. ஏறத்தாழ 200 தோல் தொழிற்சாலைகளும் வஜ்ஜிரம் தொழிற்சாலைகளும் நிறைந்த பேரணாம்பட்டிலே தீ அணைப்பு நிலையம் ஒன்று இந்த ஆண்டு துவங்க கேட்டுக்கொள்கிறேன். 1992 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் ஆயிரம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் அளிக்கும் திட்டம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த வகையிலே பேரணாம்பட்டு தொகுதியிலே இருக்கிற ஏறத்தாழ எல்லா கிராமங்களுக்கும் பஸ் வசதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே பேரணாம்பட்டிலே பேருந்து நிலையம் இல்லை, அங்கே பேருந்து நிலையம் துவங்க புரட்சித் தலைவியினுடைய அரசு ஆணை இட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடங்களிலே கழிப்பறைகள் கட்டித் தரப்போவதாக அறிவித்திருக்கிற இந்த அரசினுடைய கொள்கை உண்மையாக வரவேற்க வேண்டியது. குறிப்பாக பெண் ஆசிரியர்கள் மிகவும் சிரமப்படுகிற நிலைக்கு அந்த வசதி உண்மையாகவே உதவி அளிக்கும். அதேபோல மற்ற தேவையான பரிசோதனை ஆய்வுக் கூடம், மற்ற கட்டிட வசதிகள் கூட செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பேரணாம்பட்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக் கூட வசதி செய்து தந்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிற இந்த நேரத்திலே பேரணாம்பட்டிலே பிளஸ் 2 தேர்வு மையமும், மேல்பட்டி, மாதனூர், வடசேரி போன்ற இடங்களிலே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையமும் அமைக்க ஆணையிட வேண்டுகிறேன். இந்த 20 ஆம் நூற்றாண்டிற்கும் 21 ஆம் நூற்றாண்டிற்கும் முதல்வராக இருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயராலே துவக்கப்பட இருக்கிற "புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்" இந்தக் காலக் கட்டத்திலே மிகத் தேவையான ஒரு திட்டமாக விளங்குகிறது. ஏழை எளிய



மக்கள் தங்களுக்கு என்ன நோய் வந்தது என்றே அறியாமல் சிரமப்படுகிற இந்த நாளில் நோய்க்காக இலவச முகாம்கள் அமைத்தது உண்மையாக பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பிற்பகல் 5-30

குறிப்பாக சுகாதாரக் கல்வியும் நோய்கள் வராமல் தடுப்பதற்கான அறிவுரைகளும் வழங்கப்படுவதன் மூலம் பலர் சிகிச்சை பெற வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேபோல நோய், என்ன நோய் என்று கண்டுபிடித்து அதற்கான சிகிச்சை பெற இந்த முகாம்கள் உதவும் என்பதை நினைக்கும்போது உண்மையாகவே மகிழ்ச்சி அளிக்கிறது. பேரணாம்பட்டில் இருக்கின்ற மருத்துவ மனைக்கு ஒரு அறுவை அரங்கம் புதிய கட்டிடம் கட்ட கேட்டுக்கொள்கிறேன்.

மாதனூர் ஒன்றியத்தில் இருக்கின்ற பள்ளிக்குப்பம் கிராமத்திலும் ஆலங்காயம் ஒன்றியத்தில் இருக்கின்ற மதனாஞ்சேரியிலும் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கேட்டுக்கொள்கிறேன். ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக கிராமங்களிலே ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை அளிக்கின்ற திட்டம் உண்மையாகவே பாராட்டப்பட வேண்டியது. பேரணாம்பட்டு தொகுதியிலே பீடித் தொழிலும் தோல் தொழிலும் நிறைந்திருக்கிறது. அங்கு ஏராளமான பெண்கள், படித்த பெண்கள், இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இந்த ஊரிலே இந்தத் திட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

காடு வளர்ப்பு திட்டத்தைப் பற்றி நமது ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 14 சதவிகிதம் காடு வளம் தமிழகத்தில் இருந்தாலும் கூட, இந்தக் காடுகளினால் ஏறத்தாழ பொருளாதார ரீதியிலே நன்மை இல்லை. காடுகள் இருந்தால் தான் மழை அதிகமாக பெய்யும், வன வளம் பெருகும் என்ற உண்மைக்கேற்ப காடுகளை பாதுகாக்கின்ற முயற்சியிலும், இதன் மூலம் ஏழை இளைஞர்கள், படித்த வேலைவாய்ப்பு அற்ற பெண்கள் வேலைவாய்ப்பை பெறுகின்ற வகையிலும் திட்டங்கள்

[டாக்டர் ஜெ. பரந்தாமன்] [1992 ஜனவரி 31

அமைத்துத் தர, அதிலும் கூட காடுகள் அதிகமாக இருக்கின்ற பேரணாம்பட்டு தொகுதிக்கு முன்னுரிமை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணா நதி நீர் தெலுங்கு கங்கைத் திட்டம் 1995 ஜூனுக்குள் கிடைக்கும் என்ற செய்தி மகிழ்ச்சி அளிக்கிறது. அதிலும் திட்டமிட்டு துணிவுடன் செயல்படும் புரட்சித் தலைவியின் அரசு தொலைநோக்குப் பார்வையோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையாகவே மகிழ்ச்சி அளிக்கிறது.

அதேபோல பேரணாம்பட்டு தொகுதியினுடைய மற்ற தேவைகளையும்கூட இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சார் பதிவாளர் அலுவலகம் பேரணாம்பட்டிலே இது வரையில் இல்லை ஏராளமான பெண்கள் பத்திரம் பதிவு செய்கின்ற அந்த ஊரில் இதற்கான உதவி செய்ய கேட்டுக்கொள்கிறேன் ஆம்பூர் சர்க்கரை ஆலை முன்னேற்றம் குறித்து நமது அரசு சற்று கவனம் செலுத்த கேட்டுக் கொள்கிறேன். கரும்பு உற்பத்தியிலும், அதன் மூலம் ஏழை விவசாயிகள் பயன் பெறவும் உதவி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.. மாதனூரில் பாலிடெக்னிக் துவங்க கேட்டுக்கொள்கிறேன். மேல்பட்டியில் கால்நடை சுகாதார துணை நிலையம் அமைக்க கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலைகள் சீரமைப்பு. பேரணாம்பட்டு தொகுதியிலே பல பகுதிகளிலே சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. அதிலும்கூட அந்த கடுமையான வெள்ளத்தினால் பல சாலைகள் சீரழிந்திருக்கின்றன. அதிலும் புரட்சித் தலைவி அவர்கள் பேரணாம்பட்டு தொகுதியிலே தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த போது, இந்த சாலைகள் நிலையை உண்மையாகவே பார்த்து உணர்ந்தவர். அந்த வகையிலே இந்தத் தொகுதியினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதனூர் ஒன்றியம் ரெயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்ட கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் யாராலும் நிறுத்த முடியாத நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது 2, 3 முறை 10, 15 நிமிடம் நிறுத்திவிட்டு சிறுமைப்படுத்தியது இந்த ரெயில்வே கேட். இந்த



1992 ஜனவரி 31] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

ரெயில்வே கேட்டை தண்டிக்க வேண்டுமானால், இந்தப் பகுதியிலே ஒரு மேம்பாலம் கட்ட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இதனால் எரிபொருள் மிச்சமும் நேரம் மிச்சமும் ஏற்படும். அதே போல பேரணாம்பட்டு தொகுதியில் இருக்கின்ற கைலாசகிரி முருகன் கோயிலில் கடும் மழையின் காரணமாக பாறை இடிந்து விழுந்து முருகர் சிலையினுடைய பாதம் உடைந்துவிட்டது. இதைச் சீரமைக்கவும், குடமுழுக்கு விழா நடத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் உதவிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சி நடக்கின்ற இந்த நாளிலே தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்கள் பல நன்மைகளை அறிவித்திருக்கின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து பேரணாம்பட்டு தொகுதி மக்களுடைய முன்னேற்றத்திற்கு, தமிழக முதல்வர் இதய தெய்வம் உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளோடு எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. செல்வராஜ்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு காங்கிரஸ் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தீராத நீண்ட நாளைய பிரச்சினையான காவிரி நீர் பிரச்சினையில் மத்திய அரசை ஒரு சில கட்சிகள் தேச ஒருமைப்பாடு சீர்குலைந்துவிட்டதென்றும் தமிழர்களை காங்கிரஸ் காக்கத் தவறிவிட்டது எனவும் கூறிவந்தன. அவர்களுக்கு இந்த வேளையில் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

காவிரி நீர் பிரச்சினையில் நடுவர் மன்ற தீர்ப்பை உச்சநீதி மன்றம் ஏற்று 205 டி.எம். சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவை மத்திய அரசு கெஜட்டில் வெளியிட வேண்டும் என அரசியல் வேறுபாடு பாராது தமிழக

அரசுடன் காங்கிரஸ் கட்சியும் குரல் கொடுத்தது. மத்திய அரசு பாரபட்சம் பாராது ஒட்டு மொத்த இந்தியாவை கட்டிக் காக்கவும், தேசிய ஒருமைப்பாட்டை பேணி காக்கவும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் உச்சநீதிமன்ற தீர்ப்பை அரசு கெஜட்டில் வெளியிட செய்தார். மத்திய அரசு சுயநலமாக செயல்பட்டிருந்தால் கர்நாடக அரசுக்கல்லவா துணை போயிருக்கும்? தன் சொந்த கட்சி என்றும் பாராது நீதியை நிலை நாட்டியுள்ளது மத்திய அரசு. சில கட்சிகள் தேர்தலை நினைத்து செயல்படும் இந்த வேளையில் தேசிய கட்சியான காங்கிரஸ் தேச நலனையே பேணிகாத்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 5.35

தென்னாட்டைச் சேர்ந்தவரே, நம் நாட்டை ஆள்கிறார் என்ற பெருமையை பெற்றுள்ள இந்த வேளையில் நம் மாநிலத்திற்கு மத்திய அரசு மதுவிலக்கு கொள்கைக்கு துணை வரவில்லை. மதுவிலக்கை அமுல் படுத்தும்போது ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கவில்லை என குறை கூறப்படுகிறது. நான் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன். குஜராத்திலே மது விலக்கு அமுலிலே உள்ளது. அவர்களுக்கு மத்திய அரசு உதவி தொகை அளிக்கவில்லை. ஆனால் தமிழகத்திற்கு மட்டும் எப்படி தனியாக வழங்கமுடியும்? மத்திய அரசு எப்போது திட்டம் தீட்டினாலும் ஒட்டு மொத்த இந்தியாவின் முன்னேற்றம் கருதி தான் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக்கு மட்டும் தனியாக திட்டம் தீட்டமுடியுமா? சிந்திக்க வேண்டும். மாநில அரசுதான் மாநில முன்னேற்றத்திற்கான திட்டம் போட்டு இழப்புகளை சரி செய்து நடத்தி செல்ல வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரையில் அரசு பஞ்சாயத்து, நகரசபை, மாநகராட்சிக்கு தேர்தல் நடத்துவதை அறிவிக்க வில்லை. மக்கள் அன்றாட பிரச்சினையான குடிநீர், சாலை வசதி, தெருவிளக்கு, சுகாதார வசதிகள் முறையாக கிடைக்க மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகள் மூலம் செயல்படும் உள்ளாட்சி துறைக்கு உடனடியாக தேர்தல் நடத்த வேண்டு கிறேன்.



கோயமுத்தூர், திருச்சி, மதுரை உட்பட முக்கிய நகரங்களில் கோவில்களுக்கு சொந்தமான நிலங்களில் சுமார் 30, 40 ஆண்டு களாக வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களை இன்றைய மதிப்பீட்டின் விலையில் அவர்களுக்கே சொந்தம் செய்து கொடுக்க வேண்டுகிறேன். கோயமுத்தூர் மாநகராட்சி நகரசபையாக இருந்தபோது மின்சார பிரிவு நகர சபை எல்லை வரை தனி இலாகாவாக செயல்பட்டு வந்தது. மாநகராட்சியாக மாற்றிய பிறகு மாநகராட்சியில் இணைக்கப் பட்ட பகுதிகள் இப்போது தமிழ்நாடு மின்சார வாரிய பொறுப்பில் உள்ளன. மாநகராட்சி மின்சார இலாக்காவுடன் இந்த பிரிவையும் சேர்த்து இணைத்து ஒரே மின்சார பிரிவாக செயல் பட ஆவன செய்ய வேண்டுகிறேன். கோயமுத்தூர் மாநகராட்சி யின் முன்னேற்ற திட்டங்களுக்காக இந்த நிதியாண்டிலாவது அதிக நிதி ஒதுக்க வேண்டுகிறேன்.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் நீண்ட நாள் கோரிக்கை யாகவே இருந்து வந்தது. நான் புதுடெல்லியில் மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சரை நேரில் சந்தித்து இந்த திட்டத்தை நிறைவேற்ற கோரினேன். அவர் மத்திய நீர்வள ஏஜென்சி மூலம் திட்டம் பரிசீலனையில் உள்ளதாகவும், தமிழக அரசும், கேரள அரசும் பேசி முடிவு செய்ய உள்ளதாகவும் கூறியுள்ளார்கள். நமது முதல்வர் அவர்கள் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறை வேற்றிட துரித நடவடிக்கை எடுத்து, கோயமுத்தூர், பெரியார் மாவட்டங்கள் பயன்பெறும் இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

தமிழகம் பஞ்சாபாக மாறி வருகிறது. மாற்றிவிடுவோம் என கூக்குரல் இட்டார்கள். பஞ்சாபாக தமிழகம் மாறாமல் இருக்க வும், முன்கூட்டியே தடுக்கவும் இன்று தமிழக முதல்வர் அவர்கள் செயல்பட்டு, எவ்வளவு பெரிய செல்வாக்கு மிக்கவரா னாலும் நாடுதான் முக்கியம் என துணிந்து, நடவடிக்கை எடுப் பதை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கடைகளில் இப்போது எங்கு பார்த்தாலும் அளவு குறைவாக அரிசி, எண்ணெய் வழங்குவதாக புகார்கள் வருகிறது. குறிப்பாக எனது தொகுதியில் உள்ள

[திரு. கே. செல்வராஜ்] [1992 ஜனவரி 31

ரேஷன் கடைகளில் நானும் மாவட்ட ஆட்சித் தலைவரும் அதிகாரிகளும் சென்று சோதனை செய்தபோது எடைகுறைவு கண்டுபிடிக்கப்பட்டது. போலி ரேஷன் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு பணிபுரியும் ஊழியர்களை கேட்டால், கூட்டுறவுத் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள கடைகளின் முழுப் பொறுப்பு தனி அதிகாரிகளிடம் உள்ளது, குறிப்பாக தெலுங்குபாளையம் கூட்டுறவு விநியோக கடைகளில் விநியோகிக்க பொருட்கள் வரும் போதே அளவு குறைவாக தருகிறார்கள், 75 கிலோ அரிசி மூட்டை 70 கிலோவாகவும், 100 கிலோ சர்க்கரை 90 கிலோவாகவும், மண்ணெண்ணெய் பேரலுக்கு 25 லிட்டர் குறைவாகவும் கொடுப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இந்த புகார்கள் வருகின்ற கடைகளை பரிசோதனை செய்து மீண்டும் நல்ல முறையில், பொருட்கள்—ஏழை எளிய நடுத்தர மக்கள் வாழ்க்கை பிரச்சினையான ரேஷன் பொருள்கள் முறையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். கோயமுத்தூரில் உள்ள அரசு பொது மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தங்கி உள்ள நோயாளிகளுக்கு முறையாக அரசு கொடுக்கும் மருந்துகள் கூட தருவதில்லை. வெளி நோயாளிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அங்குள்ள கட்டில்கள், படுக்கைகள் மிகவும் மோசமாக உள்ளன. இரவு நேரங்களில் மருத்துவர்கள் இருப்பதில்லை. 5 வார்டுக்கு ஒரு நர்ஸ்தான் உள்ளார். அவர் எப்படி எல்லா நோயாளிகளையும் கவனிக்க முடியும்? சுகாதாரம் கிடையாது. மின்சார விளக்குகள் எரியாமல் ஒரே இருள்மயமாக உள்ளது. கழிவு நீர் வாய்க்கால்கள் உடைந்து மோசமாக உள்ளன. உடனடியாக இந்தக் குறைகளை போக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சந்தன கடத்தல் மன்னன் வீரப்பனை இதுவரை எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்தும் பிடிக்காமல் இருக்கிறோம். அரசுக்கே சவால் விடும் விதத்தில் செயல்பட்டுவரும் வீரப்பனை பிடிக்க தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா அரசுகள் கூட்டாக காவல் துறை மூலம் நடவடிக்கை எடுத்தும் இதுவரை எந்த பலனும் இல்லை. வனத்துறையை சேர்ந்த அதிகாரி சீனிவாசனை கொன்றுவிட்டனர். வீரப்பனிடம் உள்ள துப்பாக்கிகள், வெடி குண்டுகள் எப்படி அவருக்கு கிடைக்கிறது என கண்டுபிடித்து



1992 ஜனவரி 31] [திரு. கே. செல்வராஜ்]

அவரை பிடிக்க நமது காவல்துறை, வனத்துறையாளருக்கு சக்தி வாய்ந்த எந்திர துப்பாக்கி கொடுத்து உடனடியாக வீரப்பனை பிடிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக தமிழர்கள் பாதிக்கப்பட்டு தமிழகம் வந்துள்ளார்கள். அவர்கள் மீண்டும் திரும்பி சென்று மாமூல் வாழ்க்கை துவக்க தமிழக அரசும், கர்நாடக அரசும் பேசி உதவிகள் செய்து அவர்களை காப்பாற்றி வாழ்வு கொடுக்க வேண்டுகிறேன்.

தனியார் கம்பெனிகள் மின்சாரம் தயாரிக்க அரசு உதவி வேண்டுகிறேன். ஒரு சில தொழிற்சாலைகளில் எல்லா உட்பிரிவுக்கும் காண்ட்ராக்ட் பிரிவு ஏற்படுத்தி குறைந்த கூலி கொடுத்து தொழிலாளர்களை நிரந்தரம் செய்யாமல் பல ஆண்டுகளாக தற்காலிக தொழிலாளர்களாக தினக்கூலிக்கு வைத்துள்ளார்கள். அரசு அந்த மாதிரி காண்ட்ராக்ட் தொழிலாளர்களை வைத்து நடத்தும் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுகிறேன்.

பிற்பகல் 5-40

தங்கநகை செய்யும் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமாக, ரெயில்வே, தனியார் கடைகள், அரசு நிறுவனம் இப்படி பல துறைகளில் உள்ளனர். அவர்களுக்கும் நிரந்தரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் அனைத்து உதவிகளும், மருத்துவ வசதியும், வருங்கால வைப்பு நிதி திட்டமும் கிடைக்க சட்டம் இயற்ற வேண்டுகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட், உக்கடம் தினசரி மார்க்கெட் கடைகளுக்கு வாடகையை திடீரென 100 சதவீதம் உயர்த்திவிட்டது மாநகராட்சி. அதை மறுபரிசீலனை செய்து, 100 சதவீத வாடகை உயர்வை 10 சதவீதமாகத் தளர்த்த அரசு நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

* திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், தானைத் தலைவி, தங்கத் தலைவி, உத்தமத் தாய் அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களில் விழுந்து வணங்கி, இங்கே ஆளுநர் உரைமீது பேச விழைகின்றேன்.

ஆளுநர் உரையில், தமிழக மக்களுக்கான நல்ல மேம்பாட்டுத் திட்டங்களைக் காணுகின்றேன். பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டத்தை வரவேற்கிறேன். நிலப் பதிவேட்டு மேலாண்மைத் திட்டத்தை வரவேற்கிறேன். ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு ஊருக்கும் பஸ் வசதி செய்து கொடுப்பதை வரவேற் கிறேன். மார்ச் மாதம் இறுதிக்குள் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் சப்ளை செய்வதை வரவேற்கிறேன். இந்தியாவிலேயே இல்லாத, டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ முகாம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதை பாராட்டுகிறேன். ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் பயன்பெறும் வகையில், இந்தத் திட்டத்தின் மூலம் 10 ஆயிரம் இலவச மருத்துவ முகாம்களை நடத்த ஏற்பாடு செய்வதைப் பாராட்டுகிறேன். மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியும், இன்னும் 2 ரூபாய்க்கு அரிசியை ஏழை மக்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதை பாராட்டு கிறேன். தேர்தல் அறிக்கையிலே மதுவை ஒழித்து, தாய்மார் களின் கண்ணீரைத் துடைப்பேன் என்று கூறிய சத்தியத் தலைவி, அதேபோன்று ஆட்சிப் பொறுப்பேற்றதும், மதுவை ஒழித்து, தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்து, மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் இறால் மீன் வளர்க்கும் பண்ணை ஏற்படுத்துவதை பாராட்டுகிறேன். வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபோன காடுகளில் சுமார் 2 ஆயிரம் ஹெக் டேர் பரப்பளவு நிலங்களில் மீண்டும் மரங்களை வளர்ப்பதற்கான திட்டத்தைப் பாராட்டுகிறேன். கவர்னர் உரையில், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் அத்தனை பேரும் பயன்பெறும் வகையில் நல்லபல திட்டங்கள் அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.



இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியான சங்கராபுரம் தொகுதி வாழ் மக்கள் பிரச்சினை பற்றி பேச நான் ஆசைப்படு கிறேன். சங்கராபுரத்திலே ஒரு அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரத் திலே ஓர் பொறியியல் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வராயன் மலைவாழ் மக்கள் நலன் காக்க அங்கே காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும். ஏனென்றால், அங்கே மூங்கில் அதிகமாகக் கிடைப் பதோடு கள்ளக்குறிச்சி, மூங்கில்துறைப்பட்டு ஆகிய இடங்களில் 'பெக்காஸ்' (Bagaasse) என்ற கரும்புச் சக்கைகள் ஏராள மாகக் கிடைக்கின்றன. எனவே அங்கே ஒரு காகிதத் தொழிற் சாலையை ஏற்படுத்தி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணி நதியின் குறுக்கே, சங்கராபுரம்-டு-புத்திராம்பட்டு சாலையில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்னாற்காடு மாவட் டத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு, உத்தமத் தாய், சத்தியத் தாய், அன்னை சந்தியா அவர்களின் பெயரை, திருநாமத்தை வைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட சங்கராபுரத்திலே பிரைமரி ஹெல்த் சென்டர்தான் இருக்கிறது. அங்கே ஒரு நவீன மருத்துவமனையைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி-டு-சங்கராபுரம்-டு-மூங்கில் துறைப்பட்டு-டு-திரு வண்ணாமலை சாலையை வேலூர்-டு-சேலம் இணைப்புச் சாலை யாக உயர்த்தி, மாநில நெடுஞ்சாலையாக உயர்த்தித் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரத்தை தனி தாலுகா வாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கரா புரத்தில் புதிய பஸ் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கே பஸ் நிற்க வசதியில்லாமல் மிகவும் கஷ்டமான நிலை இருக்கிறது. எனவே, சங்கராபுரத்தில் ஒரு புதிய பஸ் நிலையத்தைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. இராமசுவாமி] [1992 ஜனவரி 31

நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித் துறைக்கு நிரந்தர பிரிவு அலுவலகக் கட்டிடங்களை சங்கராபுரத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரம் தொகுதியில் பயணியர் ஓய்வு விடுதி அதாவது விருந்தினர் மாளிகை இதுவரையில் கட்டப்படவில்லை. எனவே, சங்கராபுரத்தில் ஒரு பயணியர் ஓய்வு விடுதியைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

சங்கராபுரத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரத்தில், எல்லம்பட்டியில் அருகேயுள்ள முசுகுந்தா நதியில் குறுக்கே நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரத்தில் போக்குவரத்து வசதிகள் சரியான முறையில் இல்லை. சங்கராபுரத்திலிருந்து திருவண்ணாமலை வரை சாலைகள் மிகவும் பழுதடைந்து கிடக்கின்றன. சாதாரணமாக காரோ, வண்டிகளோ செல்ல முடியாத அளவிற்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது. எனவே அந்தச் சாலைகளை நல்ல முறையில் புதுப்பித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் தொகுதி முழுவதும் சாலைப் போக்குவரத்து மிகவும் மோசமாக இருக்கிறது. சங்கராபுரத்திலிருந்து புத்திராம்பட்டு, சங்கராபுரத்திலிருந்து செல்லம்பட்டு, சங்கராபுரத்திலிருந்து சேராப்பட்டு ஆகிய ஊர்களிலே சாலைகளெல்லாம் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. பல ஆண்டுகளாக 15 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தச் சாலைகள் அப்படியே இருக்கின்றன. எனவே, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், சங்கராபுரத்திலுள்ள அனைத்துச் சாலைகளையும் நல்ல முறையில் செய்து பஸ் போக்குவரத்து செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



1992 ஜனவரி 31] [திரு. சி. இராமசுவாமி]

கல்வராயன் மலையில் பணி புரிகின்ற ஆசிரியர்கள், டாக்டர்கள் யாரும் அலுவலகத்திற்குச் செல்வதே இல்லை. அவர்கள் கள்ளக்குறிச்சியிலே தங்கிக் கொண்டு மாதாமாதம் சம்பளம் வாங்க மட்டும் கல்வராயன் மலைக்குச் செல்கிறார்கள். எனவே, ஆசிரியர்கள், டாக்டர்கள், அனைத்து அதிகாரிகள் ஆகியவர்கள் கல்வராயன் மலைக்குச் செல்லாமலேயே கள்ளக்குறிச்சியிலேயே இருந்துகொண்டு பணி செய்கிறார்கள். எனவே, அந்த அதிகாரிகள் மலைக்குச் சென்று அந்த மலைவாழ் மக்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, டாக்டர்கள் கல்வராயன் மலையிலுள்ள டாக்டர் ஒருவரும் மருத்துவமனைக்குச் செல்வதே இல்லை. அங்கு இருக்கின்ற உயர் அதிகாரிகள் கல்வராயன் மலைக்குச் செல்வதே இல்லை. எனவே, கல்வராயன் மலையில் இருக்கின்ற டாக்டர்களும், அதிகாரிகளும் அந்தக் கல்வராயன் மலைக்குச் சென்று அந்த ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கல்வராயன் மலை, சேராப்பட்டு, வெள்ளிமலை, கரியாலூர் ஆகிய ஊர்களுக்குக் கடந்த ஐம்பது நாட்களாகப் பஸ் போகாமல் மிகவும் வேதனையாக உள்ளது. அங்குள்ள மலைவாழ் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு, பஸ் இல்லாமல் இருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், அங்கே ரோடு சரியாக இல்லை, பஸ் செல்ல முடியாது, 50 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, கல்வராயன் மலைக்கோ, சேராப்பட்டுக்கோ சென்றால் பஸ் போக முடியாத நிலையில் இருக்கிறது; உருண்டு விழுந்து விடும் என்று சொல்கிறார்கள். அந்தச் சாலையை நான் நேரடியாகச் சென்று பார்த்தேன். சுமாராக நல்ல முறையில்தான் இருக்கிறது. பஸ் செல்லலாம். எனவே, கல்வராயன் மலை, வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு ஆகிய ஊர்களுக்கு பஸ்களை அதிக அளவிற்கு விட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வராயன் மலையில் வசிக்கின்ற மலைவாழ் மக்களுக்குத் தனியாக, வெள்ளிமலையில் தனியாக ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. இராமசுவாமி] [1992 ஜனவரி 31

கள்ளக்குறிச்சியில் ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சப்-கோர்ட் வேண்டும் என்ற, வழக்கறிஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சப்-கோர்ட் ஒன்றை கள்ளக்குறிச்சியில் புதிதாக ஏற்படுத்தித் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் அறிவித்துள்ள திட்டங்கள் தமிழக ஏழை எளிய மக்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் பயன் தரும் திட்டங்களாக உள்ளன. குறிப்பாக, கிராமப்புற மக்களும், பாட்டாளி மக்களும் பயன் பெறும் திட்டங்கள், மக்களுக்குத் தேவையான குடிநீர், சாலைப் போக்குவரத்து வசதி ஆகிய நல்ல பல திட்டங்களை அதில் காண்கிறேன்.

மேலும், காவிரித் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து, தமிழக மக்களுக்கு புரட்சிகரமான திட்டங்களைச் செயல் படுத்துகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டுகிறேன்.

எனவே, இந்த ஆளுநர் உரையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். கே. சுந்தரம்.

**திரு. எம். கே. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆண்டுக்காக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பினை—இந்தத் திருச்சபையிலே பேசுகின்ற அளவிற்கு என்னைச் சட்டமன்ற உறுப்பினராக இங்கே நியமித்த புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியினை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 ஜனவரி 31] [திரு. எம். கே. சுந்தரம்]

இன்றையதினம் இந்தச் சபையிலே ஆளுநர் உரை நிகழ்த்துகின்றபொழுது, அவர் வாயிலாக வெளியிட்டிருக்கின்ற அரும் பெரும் கருத்துக்களெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாக எந்த அளவிற்கு இந்த நாட்டிலே ஏழை எளிய மக்களிடத்திலே ஒரு மாறாத பாசத்தையும், பற்றையும் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

பிற்பகல் 5-50

இன்றையதினம், புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்தாலும், மறையாமல் நம்மிடையே இருக்கின்ற அந்த ஒப்பற்றத் தலைவருடைய வாரிசு, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்று தமிழகத்தினுடைய 5½ கோடி மக்களும் சொன்னதற்கு ஏற்ப அப்பெருமகனாருடைய திருவுருவப் படத்தை இத்திருச்சபையிலே இன்றைக்குத் திறந்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொன்னான இந்நன்னாளில், தண்டராம்பட்டு தொகுதி சார்பிலே என்னை இங்கே, சட்டமன்ற உறுப்பினராகப் பேசுவதற்கு ஆளாக்கிய இதய தெய்வம் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் இங்கே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே பேசுகின்றபோது, இன்றையதினம் தமிழகத்திலே அடக்க முடியாது ; ஒடுக்க முடியாது என்று சொன்ன விடுதலைப் புலிகளை அடக்கி, ஒடுக்கி, விரட்டியிருக்கிறார்கள். சில தீய சக்திகள், விடுதலைப் புலிகளுக்கு இங்கே ஆதரவு அளித்தாலும்கூட, தமிழன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் ; அக்காலத்தில் இந்தியாவை எப்படி வெள்ளையன் ஆண்டுகொண்டு இருந்தானோ, அப்படி விடுதலைப் புலிகளால் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற தமிழ் மாநிலம் அடக்கப்படக் கூடாது என்ற காரணத்திற்காக, இதய தெய்வம்—எங்களையெல்லாம் ஆளாக்கியிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு அடக்கி ஒடுக்கியிருக்கிறார்கள். வருங்காலத்திலே, நம்முடைய சந்ததிகள், இத்தமிழ்நாட்டிலே தலைநிமிர்ந்து நிற்க வேண்டும்; தமிழ்நாடு என்று சொன்னால், இது அமைதியான மாநிலம் என்று இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அத்துணை மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் ; இந்தத்

[திரு. எம். கே. சுந்தரம்] [1992 ஜனவரி 31

தமிழ்நாட்டிலே பாரதத்தின் முன்னாள் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட அவலநிலை போக்கப்பட வேண்டுமென்று சொன்னால், விடுதலைப் புலிகளைப் போன்ற ஒருசில சர்வாதிகாரக் கூட்டத்தை இந்த நாட்டை விட்டே விரட்டவேண்டுமென்று சொல்லி, புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

முப்பிறவி எடுத்த நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகரும், எங்களுடைய இதயத்திலே வீற்றிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு திறந்து வைத்திருக்கிற படத்திற்குச் சொந்தக்காரருமான புரட்சித் தலைவர் அவர்கள், இந்த நாட்டிலே ஏழை எளிய மக்களுக்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டங்களையெல்லாம் மீண்டும் இத்தமிழ்நாட்டிலே உயிர் பெறச் செய்து, இன்றைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளுநர் உரை நிகழ்த்துகிறபோது, காவல்துறைக்கு 80.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்கு முதல்கட்டமாக ரூ. 10 கோடியை ஒதுக்க இன்றைக்கு முன்னுரிமை தந்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களுக்கு இங்கே நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு இத்தமிழ்நாட்டிலே ஒரு ஜனநாயக ஆட்சியை நிறுவுகிறபோது சொன்னார். தன்னுடைய இள வயதிலே தான் என்னென்ன கஷ்டங்களைப் பெற்றாரோ, அந்த கஷ்ட, நஷ்டங்களையெல்லாம் மனதிலே கொண்டு, தான் ஆட்சி பொறுப்பேற்றிருந்த அந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் வறுமையால் வாடக் கூடாது என்று சொல்லி, ஒரு மனிதனுக்கு அடிப்படை வசதியாகக் கருதப்படுகிற உணவு, உடை, உறைவிடம் என்ற 3 முக்கிய பொருட்களுக்கும் முக்கியத்துவத்தைத் தந்து, திட்டங்களைத் தீட்டியவர்தான் புரட்சித் தலைவர் அவர்கள். அப்படிப்பட்ட புரட்சித் தலைவருடைய வாரிசாக, இன்றைக்கு எங்களையெல்லாம் ஆளாக்கி, தமிழ்நாட்டிலே இருக்கிற 5½



1992 ஜனவரி 31] [திரு. எம். கே. சுந்தரம்]

கோடி மக்களின் தாயாக 5½ கோடி மக்களைக் கட்டிக் காப்பாற்றுகிற ஆதிபராசக்தியாக விளங்கிக் கொண்டிருக்கிற எங்களுடைய தானைத் தலைவி அவர்கள், புரட்சித் தலைவருடைய திட்டங்களை இன்றைக்கு செம்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய அருமைப் பெரியவர்—உறுப்பினர்—சொன்னார். இங்கே ஒற்றுமை வளர வேண்டுமென்று சொன்னார். அவர் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம், புரட்சித் தலைவி அவர்கள் இங்கே தெள்ளத் தெளிவாக பதிலை எடுத்துரைத்தார்கள். இங்கே நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்தவர் புரட்சித் தலைவி அவர்கள்; தந்தை பெரியார் வழி வந்தவர் புரட்சித் தலைவி அவர்கள்; புரட்சித் தலைவருடைய உண்மையான வழித் தோன்றல் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் பேரியக்கம் இங்கே கூட்டணியாக இருந்தாலும், உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சொல்லி, இன்று தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி குறைவாக இருப்பதைத் தெள்ளத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மேலும், புரட்சித் தலைவி அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது சொன்னார்கள்: இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற ஏனைய மாநிலங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீட்டைக் குறைவாக ஒதுக்கினால் அந்த ஒதுக்கீட்டை தமிழ்நாட்டுக்கும் ஒதுக்கினால் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனால் கர்நாடக அரசு கோரியது போல—அவர்கள் 310 கோடி ரூபாய் எங்களுக்கு அதிகம் தரவேண்டுமென்று கேட்டாலும் கூட இன்றைக்கு 415 கோடி ரூபாய் அதிகமாகச் சொல்லி, ஏறத்தாழ 1,915 கோடி ரூபாய் கர்நாடக அரசுக்கு அளித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-55

அதைப்போன்று தமிழ்நாட்டுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி, உரிமைக் குரலை எழுப்பி இருப்பவர் தான் மாண்புமிகு முதலமைச்சர் எங்களுடைய தானைத் தலைவி, அன்புத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். கே. சுந்தரம்] [1992 ஜனவரி 31

இன்றையதினம் இந்தத் திருச்சபையிலே உரையாற்றும்போது எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இங்கேத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு போதிய நிதியை ஒதுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒதுக்கிய சென்ற ஆட்சியினுடைய நிதி இங்கே செலவிடப்படவில்லை என்று சொன்னாலும் கூட அதற்கான திட்டங்களை தன்னுடைய அரசு இங்கே தீட்டிக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு இப்படிப்பட்ட திட்டங்களை நாங்கள் செயலாற்ற இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. எங்களால் சுயமாக தமிழ்நாட்டுக்குத் தேவையான பொருளாதாரத்தைச் சீர்செய்துகொள்ள முடியும் என்றும் இந்தத் திருச்சபையிலே கூறியிருக்கிறார்கள். கவர்னர் உரையிலே, தான் ஏழை எளிய மக்களுடைய தலைவி என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஆயிரம் ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்கு எல்லாம் ஒரு பேருந்து விடப்படும் என்று சொல்லி இன்றையதினம் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் காலத்திலே தமிழ்நாட்டிலே மூலை முடுக்குகளில் எல்லாம் பேருந்து வசதிகளைச் செய்து தந்தார்கள். ஆனால் இடையிலே வந்த அரசு புரட்சித் தலைவருடைய புகழை ஒடுக்க வேண்டும்; புரட்சித் தலைவி புரட்சித் தலைவருடைய வழித் தோன்றலாக இருக்கிறார்; அவருடைய வாரிசு இங்கே வளரக்கூடாது என்று சொல்லி அந்தப் பேருந்துகளை எல்லாம் டீசல் தட்டுப்பாடு என்று காரணம் சொல்லி நிறுத்திவிட்டார்கள். ஆனால் இன்றையதினம் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கிற அருமை அண்ணன் செங்கோட்டையன் அவர்களைப் பணித்து, புரட்சித் தலைவருடைய காலத்திலே எந்த எந்த இடங்களுக்கு பேருந்து விடப்பட்டிருந்ததோ அந்தப் பேருந்துகள் எல்லாம் திரும்பவும் திரும்பட இயக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இங்கே திருச்சபையிலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். ஒற்றுமை வளரவேண்டுமென்று சொன்னார்கள். 1980 ஆம் ஆண்டு அனைத்திந்திய



1992 ஜனவரி 31] [திரு. எம். கே. சுந்தரம்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை நம்பி இங்கே நிற்கும்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை அமைத்தார்கள். அப்போது கூட புரட்சித் தலைவர் அவர்கள் நேச உணர்வோடு, பாச உணர்வோடு அன்றைக்கு உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் குரல் கொடுப்போம், ஒற்றுமைக்குக் கைகொடுப்போம் என்று சொல்லி, அதன்படியே செயல்பட்டார்கள். அதே வழித்தோன்றலாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் உறவுக்குக் கைகொடுக்கிறார்கள். அதேநேரத்தில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது என்றால், ஒரு கண்ணிலே வெண்ணெயும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் தடவப்படுகிறது என்று சொன்னால் அதைத் தட்டிக்கேட்கின்ற உரிமைக் குரலாக உரிமை கீதம் பாடுகின்ற ஒரு செம்மலாக, ஒரு தியாகத் தீபமாக புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய தானைத் தலைவி அவர்கள் இங்கே விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே அமர்ந்திருக்கும்போது, மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே வெளிப்படுத்தியது ஒரு சிறிய புத்தகமாக இருந்தாலும் அந்தச் சிறிய புத்தகத்திலே வடிக்கப்பட்ட வார்த்தைகள் இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுடைய எண்ணங்களை, சிந்தனைகளை அவர்களுடைய அடிப்படை வசதி என்ன என்பதை உணர்ந்து, இதற்கு முன்னால் எத்தனையோ பேர் தமிழ்நாட்டிலே ஆட்சி செய்திருந்தாலும், எத்தனையோ கவர்னர் உரை படிக்கப்பட்டிருந்தாலும், இப்படிப்பட்ட ஒரு உரையை இந்தத் திருச்சபையிலே படிக்க முடியவில்லை என்பதை நிரூபிக்கின்ற வகையில் இந்த உரை அமைந்திருப்பதற்கு என்னுடைய வழிகாட்டி, என்னுடைய தானைத் தலைவி, என்னுடைய இதய தெய்வமாக வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நான் சென்றமுறை இங்கே கூறிய குறைபாடுகளை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே சீர்செய்திருக்கிறார்கள். பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான்

பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. விவசாயப் பெருங்குடி மக்களே ஏராளமாக இருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு சதவீதம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் என்னுடைய தண்டராம்பட்டுத் தொகுதியிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அங்கே உள்ள பிள்ளைகள் கல்வி பயில அருகிலே இருக்கிற நகரத்திற்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. இந்த நிலையை புரட்சித் தலைவி அரசு போக்கும் என்ற நம்பிக்கை யோடு என்னுடைய தொகுதியிலே ஒரு கல்லூரி, முடிந்தால் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-00

அதே நேரத்திலே சாத்தனூர் அணை என்னுடைய தொகுதி யிலே இருந்தாலும் அருகிலே உள்ள 15,000 மக்கள் வசிக்கின்ற தானிப்பாடி போன்ற கிராமங்களுக்கு குடிநீர் பிரச்சினை இருக் கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஆன்றோர்கள் சொல்வார்கள். சான் றோர்கள் சொல்வார்கள், மாதம் மும்மாரி பொழிவது மன்னனைப் பொறுத்தது என்று. அப்பழமொழிக்கேற்ப புரட்சித் தலைவியி னுடைய தர்ம மனதுக்கு ஏற்றவாறு இன்றையதினம் மழை பெய்திருக்கின்றது. இன்றைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை இல்லை. இருந்தாலும், வறட்சியான காலத்திலே, தண்டராம்பட்டு போன்ற கிராமத்திலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கின்றது. அப்படிப் பட்ட தண்டராம்பட்டு கிராமத்திற்கு, சாத்தனூர் அணையி லிருந்து குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒரு பெரிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி என்னுடைய தானிப்பாடி நகரத்தினுடைய தண்ணீர்ப் பிரச்சினை யைப் போக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசை மனமார வேண்டிக் கேட்டுக் கொள் கிறேன்.

இன்றைய தினம், புரட்சித் தலைவர் அவர்களின் வழித் தோன்ற லாக வந்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவருடைய திருவுருவப் படத்தை தன்னுடைய பொற்கரங்களால் திறந்து வைத்திருக்கின்ற



என்னுடைய இதய தெய்வம், என்னுடைய காவல் தெய்வம், என்னுடைய நெஞ்சிலே வீற்றிருக்கின்ற என்னுடைய தானைத் தலைவி, எங்கோ பிறந்த எங்களை, என்னைப் போன்ற விவசாயி களை எல்லாம் இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே ஒரு சட்ட மன்ற உறுப்பினராக நிலை நிறுத்தியிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, என்றென்றைக்கும் இந்தத் திருச்சபையிலே இருக்க வேண்டும் என்றும் மனமார விரும்புகிறேன். தமிழகம் இருக்கின்ற வரையில், புரட்சித் தலைவிதான் என்னுடைய தானைத் தலைவி என்று சொல்லி, இப்படிப்பட்ட வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் சொல்லி, இடம் சாரு கிறேன். வாழ்க புரட்சித் தலைவி, வளர்க அவர்களுடைய தொண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எம். கிருஷ்ணன்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் இந்த அரசு கொண்டு வந்துள்ள முற்போக்குத் திட்டங்கள் அத்தனையையும் மனமாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம். கிராமங்களுக்குக் குடிதண்ணீர், 1,000 மக்கள் வாழ்கின்ற பகுதிக்குப் பேருந்து வசதி, காடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, இன்னும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம், கூட்டுறவுத் தேர்தல், இது போன்ற அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், இந்தத் திட் டங்கள் அத்தனையையும் போட்ட பின்னே, இந்தத் திட்டங்களை எல்லாம் அமல்படுத்துவதற்கு, ஆங்காங்கே இருக்கின்ற ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளிலே மக்களுடைய பிரதி நிதிகள் இல்லையே என்ற ஏக்கத்தை கவர்னர் உரை சொல்ல வில்லையே என்ற வேதனையால் அதை இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறைந்தபட்சம் இந்த நன்றி உரை தீர்மானத் தின் இறுதியிலேயாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாநகராட்சித் தேர்தல்கள் பற்றி எல்லாம் அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். ஜனநாயகத்தின் அடிப்படையே பஞ்சாயத்துதான். ஒரு கிராமத்திலே வாழ்கின்ற குடிமகனுக்கு இந்தச் சட்டமன்றம்

[திரு. எஸ். எம். கிருஷ்ணன்] [1992 ஜனவரி 31

எத்தனை சட்டங்கள் தீட்டினாலும், நாடாளுமன்றம் சட்டங்கள் தீட்டினாலும், அன்றாட வாழ்க்கையில் அவன் சந்திப்பது அங்கே இருக்கின்ற பஞ்சாயத்து, பேரூராட்சி, மாநகராட்சி தான். சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று 18, 20 ஆண்டுகள் ஆகின்றன என்பதை நினைத்துப் பார்க்கின்ற நேரத்திலே, உண்மையிலேயே நாம் ஜனநாயகத்தை முழுக்க முழுக்கக் காப்பாற்றுகிறோமா என்ற எண்ணமே நமக்குத் தோன்றுகிறது. ஜனநாயகத்தின் ஆணி வேர் பஞ்சாயத்து தான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நான் ஒரு செய்தியை ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். அது தவறாக இருக்காது என்று நம்புகிறேன். நம்முடைய திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையிலே சற்றுக் குறைவதற்குக் கூட நாம் ஜனநாயகத்தைப் பரவலாக்கவில்லையோ என்ற ஒரு குறை இருக்கிறதோ என்று கருதுகிறேன். அப்படி இருக்குமானால் அதனையும் களைகின்ற வகையில் நாம் முயற்சி எடுத்துக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன். சென்ற 29-ம் தேதியிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 63 கல்லூரிகளைச் சார்ந்த 3,000 பேராசிரியர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். ஆசிரியர்கள் கூட்டுக் கமிட்டி நேற்று இரவு கூடி, மற்ற பல்கலைக் கழகங்களைச் சார்ந்த பேராசிரியர்களையும் சேர்த்து 15,000 பேராசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபடக் கூடிய நிலை இருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது.

பிற்பகல் 6-05

இந்த நிலைக்குக் காரணம் என்ன என்று கேட்டால் சென்னை கிறித்தவக் கல்லூரியில் 3 பேராசிரியப் பெருமக்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திதான். அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதற்கு ஏதாவது நியாயமான காரணங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் அவர்கள் கேட்டதெல்லாம் அங்கே ஆசிரியருடைய வைப்பு நிதியிலே வைக்க வேண்டிய பணத்தை வைப்பு நிதியில் வைக்காமல் தனிப்பட்ட கணக்கிலே வைத்திருந்தது குறித்து அவர்கள் குற்றம் சாட்டினார்கள். பல்கலைக் கழகத்தினுடைய வழிமுறைகளைப் பின்



1992 ஜனவரி 31] [திரு. எஸ். எம். கிருஷ்ணன்]

பற்றாமல் அந்தக் கல்லூரி தன்னிச்சையாக அட்டானமஸ் என்ற பெயரில் பல்கலைக் கழகத்தினுடைய வழிமுறைகளையும், பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய வழிமுறைகளையும் கடைப்பிடிக்காமல் நடந்துகொள்வதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆக இதுபோன்ற குறைகளைச் சுட்டிக்காட்டிய ஒரே காரணத்திற்காகத்தான் அங்கே பேராசிரியர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இதிலே பல்கலைக் கழகம் அந்த நிர்வாகத்திற்கு யோசனை சொல்லியிருக்கிறது. பேராசிரியர் சங்கங்கள் யோசனை சொல்லி இருக்கின்றன. தமிழக அரசு அவர்களை புத்திமதி சொல்லி இருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நிறைய சிரமம் எடுத்துக்கொண்டு அதிகாரிகளை வைத்தும், தானும் பேசி இதற்கான முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். என்றாலும் கூட நிர்வாகம் தன்னிச்சையாகச் செயல்பட்டு இன்றைக்கு ஒரு மாபெரும் ஆசிரியர்கள் போராட்டத்தைக் கொண்டுவந்துவிட்டிருக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. இந்த நிலை தொடருமேயானால் மாணவர்களும் அதிலே ஈடுபடக்கூடிய நிலை ஏற்படும். சென்னை கிறித்தவக் கல்லூரியில் மட்டும் மாணவர்கள் அதிலே ஈடுபடாமல் இருக்கிற வகையில் அங்கே இருக்கிற நிர்வாகம் பார்த்துக்கொண்டு இருக்கிறது. காரணம் என்னவென்றால் அந்தக் கல்லூரியில் சென்ற வாரத்தில் நான்கு நாட்கள் உற்சவம் என்ற பெயரால் விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. மாணவர்களைத் தட்டிக் கொடுத்து மாணவர்களை எந்த வகையில் வசப்படுத்த வேண்டுமோ அந்த வகையில் நிர்வாகம் வசப்படுத்தி அவர்களை ஒதுக்கிவிட்டு ஆசிரியர்கள் போராட்டத்தை நசுக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

ஆகவே என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் கல்வி அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இதிலே தலையிடவேண்டும். இதிலே தலையிட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு நிமிடம் அவர்களை அழைத்து அதாவது நிர்வாகத்தை அழைத்துப் பேசினால் இதற்குத் தீர்வு காணமுடியும் என்று நம்புகிறேன். எப்படி என்றால் இதற்கு ஒரு முன்னுதாரணம் இருக்கிறது. எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிப் போராட்டம் நடந்த வேளையிலே அன்றைக்கு முதல்வராக இருந்த மாண்புமிகு

[திரு. எஸ். எம். கிருஷ்ணன்] [1992 ஜனவரி 31

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவர்களை நேரில் கூப்பிட்டு எச்சரிக்கை விடுத்தார்கள். அதன் விளைவாக அங்கே போராட்டம் தவிர்க்கப்பட்டது. சுமுக நிலை ஏற்பட்டது. அதையே முன்னுதாரணமாக வைத்து இங்கே மீண்டும் அந்த வகையில் முதல்வர் அவர்களின் முயற்சியில், கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது உண்மையிலே எதிர்பார்க்கக்கூடிய ஒன்று. அதுமட்டுமல்ல, அந்தக் கல்லூரியில் பல்வேறு போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே இலங்கையில் இருந்து வந்திருக்கின்ற மாணவர்களுக்கு என்று வெளிநாட்டில் இருந்து நிறைய பணம் வருகிறது. அந்தப் பணம் எப்படி வருகிறது, எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அங்கே போதை மருந்து வியாபாரிகளுடைய கையிலே அங்கே இருக்கிற மாணவர்கள் சிக்கி இருக்கிறார்கள் என்ற செய்தி எல்லாம் இருக்கிறது. அதுமட்டுமல்ல. அமரர் இராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட அன்று அங்கே விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த ஒரு போராளி அதற்கு மறுதினத்திலேயிருந்து அங்கே இல்லை என்று சொல்கிறார்கள் அவைகளையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, செல்கிற கிராமங்களிலே எல்லாம் பல இடங்களில் மின் விளக்குப் பிரச்சினை வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் என்.ஓ.சி. கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள் என்.ஓ.சி. பிரச்சினை பல கிராமங்களை இருட்டிலே வைத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் பணிவோடு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இடம் குட்டைப் புறம்போக்கா, குளத்துப் புறம்போக்கா, மேய்க்கால் புறம்போக்கா, நத்தம் புறம்போக்கா என்பதெல்லாம் வேறு பிரச்சினை. அந்த இடத்திலே அவர்கள் வாழ்வதற்கு உரிமை இல்லை என்றால் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது வேறு பிரச்சினை. ஆனால் நாளைக்கு அவர்களை அங்கேயிருந்து அப்புறப்படுத்தவது என்றாலும் கூட இன்றைக்கு இரவு அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1992 ஜனவரி 31] [திரு. எஸ். எம். கிருஷ்ணன்]

அதேபோல் என்னுடைய தொகுதியில் இருக்கிற பம்மல் நகரத்தில் கழிவு நீர்ப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. ட்ரீட்மென்ட் ப்ளான்ட் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த ப்ளான்ட் பணிபுரிவதற்கு இன்னும் ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுகள் பிடிக்கும். அங்கே குறைந்தது 150-லிருந்து 200 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவு நீர் நகர் முழுவதும் உள்ள நிலத்தடி நீரை மாசுபடுத்தியது மட்டுமல்லாமல் தெருக்களில் சாக்கடைகளாக கழிவுநீர் போய்க்கொண்டிருப்பதைப் பலமுறை பார்த்தாகிவிட்டது. அதைப் பார்க்கின்ற நேரத்தில் மாசுக்கட்டுப்பாடு வாரியம் என்ற ஒன்று தமிழகத்திலே இருக்கிறதா என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கின்றது. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

சோழிங்கநல்லூரிலிருந்து புது மகாபலிபுரம் சாலையை இணைக்கின்ற ஒரு சாலை இருக்கிறது. ஒரு வருடம் ஒன்றரை வருடமாக செப்பனிடப்படாமல் இருக்கின்றது. இப்போது பணி துவங்கி இருக்கிறது. ஆனால் அந்த வழியிலே செல்கின்ற அந்த பாதை நம்முடைய முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் பறங்கிமலை தொகுதியிலே சட்டமன்ற அங்கத்தினராக அந்த நேரத்திலே அந்தப் பாலத்தைக் கட்டி, அந்தப் பாலத்தை பழைய மகாபலிபுரம் சாலையையும் புது மகாபலிபுரம் சாலையையும் இணைக்கின்ற சாலையாக வைத்து அந்த பகுதியிலிருந்து வருகின்ற மக்களுக்கு நலன் ஏற்படுகின்ற வகையிலே சாலையைச் செப்பனிட்டுத் தந்தார்கள். ஆனாலும் அந்த சாலையிலே போக்குவரத்து நடைபெறவில்லை. பஸ்சும் செல்லவில்லை. அதன் விளைவாக அந்த பகுதி மக்கள் 20 மைல், 30 மைல் சுற்றி வரக்கூடிய நிலை இருக்கிறது என்பதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல திருநீர்மலையிலே கல் உடைக்கின்ற தொழில் நடைபெறுகிறது. அந்த கல் உடைக்கின்ற மலைகளிலே அந்த கல் உடைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்துவிடுவோமானால்,

[திரு. எஸ். எம். கிருஷ்ணன்] [1992 ஜனவரி 31

அரசுக்கு அதிலே நிறைய வருமானம் உண்டு. அங்கே அனுமதியும் கொடுக்கவில்லை. அங்கே உடைப்பதை நிறுத்துவதற்கும் ஏற்பாடு செய்யவில்லை. எனவே அங்கே நம் அரசு வருமானத்தை இழந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. அண்மையிலே சென்ற மாதத்தில் 2 மாதங்களுக்கு முன்னே பம்மலிலே இருக்கின்ற மலையிலே இருந்து ஒரு கற்பாறை விழுந்ததன் விளைவாக 4 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலை இந்த பகுதிக்கு வந்துவிடும். ஆனால் அதிலே அனுமதியும் இல்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக அங்கே கல் உடைக்கின்ற நிலையிலே எவ்வளவு குறைபாடுகள் ஏற்படும் என்பதனை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அண்மையிலே மழை பெய்தது. மழை 5 நாட்கள், 6 நாட்கள் தான் பெய்தது. ஆனால் அந்த 6 நாட்கள் மழை இந்த நகரத்தை மட்டுமல்லாமல் தமிழகத்தையே அல்லோலகல்லோலப்படுத்திவிட்டது. அரசு நல்ல நிபுணர்களை வைத்து மழை பெய்கின்ற நாட்களிலே அந்தத் தண்ணீரை எந்த அளவுக்கு நாம் சேமிக்க முடியும் என்பதனைத் திட்டமிட்டு செயல்படவேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னும் 2 மாதங்கள் போனால் வறட்சி வந்துவிடப்போகிறது. நாம் மழையையும் சந்திக்கிறோம், வெள்ளைத்தையும் சந்திக்கிறோம், வறட்சியையும் சந்திக்கிறோம். ஆகவே மழைக் காலங்களிலே தண்ணீரை நிறைய தேக்குவதற்கு சரியான திட்டம் தீட்டுவோமானால் வறட்சியையும் சமாளிக்கலாம், மழையையும் சமாளிக்கலாம்.

சோற்றுப் பொட்டலமும், ரொட்டியையும் கொடுப்பதிலே கவனம் செலுத்துவதிலே அதிகமாக இருப்பதை விட்டுவிட்டு இந்தத் திட்டமிட்டு அந்த தண்ணீரை தேக்கி வறட்சிக் காலங்களிலே பயன்படுத்துவதற்கு வேண்டிய வகையிலே திட்டம் தீட்டப்படவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 ஜனவரி 31] [திரு. எஸ். எம். கிருஷ்ணன்]

அதேபோல அனகாபுத்தூருக்கு அருகாமையிலே இருக்கின்ற குன்றத்தூருக்கு செல்கின்ற வழியிலே மழை பெய்துவிட்டால், 15 நாட்கள், 20 நாட்கள் போக்குவரத்தே ஸ்தம்பித்து விடுகிறது. அந்த பகுதியிலே பாலம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கும் என்று கருதுகிறேன். அந்த திட்டத்தை விரைவுப்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல ஒட்டியம்பாக்கத்திலே மழை பெய்துவிட்டால், 5 நாட்கள், 6 நாட்கள் மக்கள் போக்குவரத்தைத் தடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டினையும் செய்ய வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்து, ஆளுநர் அவர்களுடைய உரை வரவேற்கத்தக்க உரை, பாராட்டுவதற்கு உரிய உரை என்றாலும் ஒரு சில திருத்தங்கள், இந்த மாறுதல்கள் தேவை என்பதனை சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

* **மாண்புமிகு இராம வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது கிருத்துவ கல்லூரியிலே நடைபெற்ற ஆசிரியர் நீக்கங்களையொட்டி அங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற பல்வேறு முறைகேடுகளையொட்டி தமிழகத்தில் கல்லூரி ஆசிரியர்கள் கடந்த 2 நாட்களாக வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ள செய்தியை எடுத்துச்சொல்லி, அந்த நிர்வாகத்தைத் திருத்துவதற்கு அரசு முயற்சிக்கவேண்டும் என்றும், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட வேண்டும் என்றும் இங்கே வேண்டுகோள் விடுத்தார்கள். 2 நாட்களாக மாநிலம் தழுவிய அளவில் கல்லூரிப் பேராசிரியர்கள் இதன் தொடர்பாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே ஒரு விளக்கத்தை அரசின் சார்பில் இந்த நேரத்தில் அளிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

பிற்பகல் 6-15

கிறிஸ்தவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் அது ஒரு சிறுபான்மையினர் நடத்துகிற கல்லூரி என்கிற உரிமையையும், தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரி என்கிற அந்த சிறப்பு

[திரு. இராம வீரப்பன்] [1992 ஜனவரி 31

உரிமையையும் பெற்று நடைபெற்று வருகிற ஒரு புகழ் மிக்க கல்லூரி ஆகும். ஆனால் அந்த புகழ்மிக்க கல்லூரியிலே கடந்த இரண்டு ஆண்டுகளாக புதிதாக முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற முதல்வர் வந்ததில் இருந்து நிர்வாகத்திலே பல குளறுபடிகள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் சுட்டிக்காட்டியது போன்று பல்வேறு தவறுகள் நடைபெறுவதாகவும், அரசுக்கும் புகார் மனுக்கள் வந்துள்ளன. ஆனால் அவைகளைப் பற்றி விசாரணை செய்வதற்கு பல்கலைக் கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தபொழுது, பல்கலைக் கழகம் அதிலே தலையிடக்கூடாது என்று நீதிமன்றத்திலே தடையாணைப் பெற்றுள்ளார்கள்.

அரசாங்கம் தாப்பிலேயிருந்து அவர்களை அழைத்துப் பேசி, சில பரிகாரங்களைத் தெரிவித்த நேரத்திலே அதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு சென்ற மாதம் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தை, மாநிலம் தழுவிய வேலை நிறுத்தத்தை இதன் தொடர்பாக நடத்துவோம் என்று அறிவித்த நேரத்தில் அந்த ஆசிரியர் அமைப்புகளை, அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து, அரசு பேசி, கிறித்தவக் கல்லூரி தொடர்பாக இந்த நிகழ்ச்சியில் ஒரு சமரசமான ஒரு முடிவை மேற்கொள்வதற்கு அரசு தீவிரமாக முயலும், ஆகவே, நீங்கள் மாநிலம் தழுவிய வேலை நிறுத்தத்தையோ அல்லது விடைத் தாள்களைத் திருத்தம் செய்கிற அந்தப் பணியைப் புறக்கணிக்கின்ற அந்த நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டோம். ஆசிரியர்களும் அரசினுடைய உறுதிமொழியை ஏற்று அவர்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்திவைத்தார்கள். ஆனால், ஒரு மாதத்திற்குப் பிறகும் அந்த நிர்வாகம் நாம் சொல்கிற எந்தத் தீர்விற்கும் உடன்படமறுத்துக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் சிறுபான்மை நிறுவனம் என்பது ஒன்று. தன்னாட்சி உரிமை பெற்ற அந்தச் சிறப்பு உரிமை ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எம். கிருஷ்ணன் எடுத்துக்காட்டியதுபோன்று தன்னாட்சி உரிமைப் பெற்ற கல்லூரி கடைபிடிக்க வேண்டிய சில நடைமுறைகளைக் கூட அவர்கள் கடைபிடிக்கவில்லை. பல்கலைக்கழக மானியக் குழு வகுத்திருக்கிற அந்த நிபந்தனைகள் பல பூர்த்தி செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் வந்திருக்கிறது. இவை எல்லா



1992 ஜனவரி 31] [திரு. இராம வீரப்பன்]

வற்றையும்விட மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல அதிர்ச்சி தரத்தக்க சில தவறுகளுக்கு, குற்றங்களுக்கு அங்கே துணையாக சிலர் இருக்கிறார்கள் என்கின்ற அந்தக் குற்றச்சாட்டுகளுக்கும் ஆதாரம் இருக்கிறது என்பது போன்ற செய்திகளும் அரசாங்கத்திற்கு வருகிறது. ஆனால் இவைகள் எதையும் நாம் போய் ஆராய்வதற்கோ, விசாரணை செய்வதற்கோ அங்கே வரக்கூடாது என்று நீதிமன்றத்திலே தடையாணைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதாவது ஆசிரியர்கள் போராட்டம் என்று வந்தால் மாநில அரசினுடைய காவல் துறையை அங்கே பந்தோபஸ்துக்காகப் பெற்றுக்கொள்கிறார்கள். இரண்டு மூன்று நாட்களாக காவல் துறை மிகப் பெரிய அளவிலே அங்கே பந்தோபஸ்து வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிற பல்கலைக் கழக ஆசிரியர்கள் மனம் நொந்துபோய் அரசாங்கம் இப்படி ஒரு தவறான நிர்வாகத்திற்குத் துணைப் போகிறதோ என்று அந்தப் பிரச்சினையை வெளியிலே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-20

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்று இதிலே தலையிட்டு விட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்திலே தலையிட்டுவிட்டால், அதிலே கவனம் செலுத்திவிட்டால் அந்தப் பிரச்சினை அடுத்த நொடியில் தீர்க்கப்பட்டுவிடும் என்பது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் நம்முடைய வேண்டுகோளை மறுக்கிறார்கள், புறக்கணிக்கிறார்கள். நாம் எடுத்து வைக்கின்ற பரிகாரங்களை ஏற்க மறுக்கிறார்கள். அரசு ஒருதலைப்பட்சமாகக்கூட முடிவெடுத்துச் சொல்லவில்லை. உங்களுக்கு இருக்கின்ற உரிமைகளை நாம் ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில், ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற அநீதி என்ன என்பதை விசாரிக்க வேண்டாமா ? என்றுதான் சொல்கிறது. 5 ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இரண்டு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. இராம வீரப்பன்] [1992 ஜனவரி 31

3 ஆசிரியர்களை நீக்கி விட்டார்கள்—டிஸ்மிஸ். இதே ஒரு தனியார் நிறுவனமாக இருந்தால், சிறுபான்மை அல்லாத நிறுவனமாக இருந்தால் அரசாங்கத்திடத்திலே முன் அனுமதி பெற்றுத்தான் ஒரு ஆசிரியரை நீக்க முடியும். ஆனால் சிறுபான்மை நிறுவனம் என்ற உரிமையை வைத்து, அவர்களை நீக்கிவிட்டார்கள். ஐந்து பேர்கள்மீது குற்றச்சாட்டு சுமத்திய நிர்வாகம் 2 பேரை எப்படி சேர்த்துக்கொண்டது? 3 பேரை ஏன் பழி வாங்குகிறது என்றுதான் பல்கலைக் கழக ஆசிரியர்கள் அமைப்புகள் கேட்டுக்கொண்டிருக்கின்றன. இதைத்தான் நாமும் அந்த நிர்வாகத்திடம் கேட்டோம். ஆனால் அந்த நிர்வாகத்திற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற சில பெரியவர்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய அரசின் தலைமைச் செயலராக இருந்து, இன்றைக்கு மத்திய அரசிலே இருக்கிறவர் அதிலே உறுப்பினராக இருக்கிறார், அப்படிப்பட்ட பலர் ஆதரவு அளிக்கிறார்கள் என்ற தைரியமோ என்னவோ தெரியாது. அவர்கள் அரசைத் துச்சமாக மதிக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன்—தமிழக மக்களையே துச்சமாக மதிக்கிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியுள்ளது. ஆனால் நேற்று முதல்வரவர்கள் இதிலே தலையிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு நாம் நம்பிக்கையைச் சொல்லியிருக்கிறோம். அந்த நிர்வாகம் நேற்று பேச்சு வார்த்தைக்கு மீண்டும் வந்திருக்கிறது. நாம் வைப்பதெல்லாம், சொல்வதெல்லாம், ஆர்பிட்ரேஷன்—விசாரணைக் குழு ஒன்றை அமைக்கலாம்; அதில் உங்கள் கல்லூரியில் படித்த பழைய மாணவர், உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவரைத் தலைவராகப் போடலாம். உங்களுடைய சார்பிலே இருந்து ஒரு பிரதிநிதி, ஆசிரியர்கள் சார்பிலே இருந்து ஒரு பிரதிநிதி. அந்த மூன்று பேரைக் கொண்ட குழு இதை விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கட்டும். அதுவரை நீக்கப்பட்ட இந்த ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இறுதித் தீர்ப்பை அந்தக் குழு எப்படி வழங்குகிறதோ, அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையிலே நாம் ஒரு நியாயமான தீர்வைக் காண்போம் என்று சொன்னால் அதையும் பரிசீலிக்கவே மறுக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு பிடிவாதமான சூழ்நிலையில் அந்த நிர்வாகம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்மையெல்லாம் வேதனைக்கு ஆளாக்கி, விஷவித்துக்களாகப் பட்டர்ந்திருக்கிற ஒரு கொடிய வன்முறைக் கூட்



1992 ஜனவரி 31] [திரு. இராம வீரப்பன்]

டத்திற்கு எங்கெங்கே நிலைக்களன் இருக்கிறதென்று கண்டுபிடிக்கும் முயற்சியில் அரசும், நம்முடைய காவல் துறையும், ஆய்வாளர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, அங்கேயும் அதற்கு ஒரு இடம் இருக்கிறதோ என்பதற்கான சந்தேகங்கள், செய்திகள் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கல்லூரியினுடைய முதல்வர் சமீபத்திலேகூட இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறார் என்கிற செய்தியும் அரசுக்குச் சொல்லப்பட்டது. அங்கே பல மாணவர்கள், இலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கிறார்கள். படிக்கிற மாணவர்கள் அனைவரும் போராளிகள் அல்ல என்று நாம் எடுத்துக்கொண்டாலும், அதற்கு ஆதரவு அளிக்கிறவர்கள் யார், அதைத் தூண்டுகிறவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலையில், தமிழகம் ஒரு சிக்கலான பிரச்சினையை, நம்முடைய முதல்வரவர்களுடைய ஆற்றல் மிக்க திறத்தாலே அதை இன்றைக்குச் சந்தித்துத் தீர்த்துக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6-25

இவ்வளவுக்கும் மேலாக நிர்வாக முறைகேடுகள், நிதி முறைகேடுகள் இருப்பதாகப் புகார்கள் தரப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் தாண்டி, நூற்றுக்கும் மேற்பட்ட, அந்தக் கல்லூரியிலே பணியாற்றும் ஆசிரியாகள் இந்தக் கல்லூரி முதல்வரால்தான் இவ்வளவு குழப்பமும் வந்திருக்கிறது என்று அரசாங்கத்திற்கு ஒரு மனு தந்திருக்கிறார்கள். இவ்வளவையும் கேட்டதற்குப் பிறகும் நாம் கையில் ஊமையராக உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். இலக்கியத்திலே சொல்வார்கள், வெயிலில் வெண்ணெய் உருகிக்கொண்டிருக்கிறது. ஒருவன் பார்த்துக்கொண்டு இருக்கிறான். எடுக்க முடியவில்லை, சொல்லவும் முடியவில்லை என்று. அதற்குக் காரணம் அவனுக்கு கை இல்லை, சொல்வதற்கு வாயும் இல்லை. ஆனால் இலக்கியத்திலே அப்படி இருக்கலாம், முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அது இருக்காது என்பதை நான் உங்கள் மூலம் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி கையில் ஊமையர் ஆட்சி அல்ல. இது நிலைத்து, நின்று, தர்மத்தை நிறைவேற்றுகிற ஆட்சி. ஆகவே, நான் ஒரு வேண்டுகோளை உங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இராம. வீரப்பன்] [1992 ஜனவரி 31

பல்கலைக் கழக ஆசிரியர்கள் இதன் தொடர்பாக மாநிலம் முழுவதும் வேலை நிறுத்தம் என்கின்ற அந்த முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய பிரச்சினை என்ன என்பதை அரசாங்கம் கூர்ந்து கவனித்து, நியாயம் யார் பக்கம் இருக்கிறதோ, தவறு யார் பக்கம் இருக்கிறதோ அவைகளைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நிர்வாகத்தைப் பற்றிய விளக்கங்களை இந்த நாட்டுக்கு தெரிவித்தாக வேண்டும். காரணம், நேற்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. டேனியல் ராஜ் அவர்களும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்னும் பலரும் தனியாக வந்து தெரிவித்து இருக்கிறார்கள். ஊழல் நிர்வாகம் அங்கே நடைபெறுகிறது என்று குறிப்பிடுகிறார்கள். அது உண்மையா என்பதை ஆராய்வதற்கு நமக்கு அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த சட்டமன்றம் அனுமதித்து ஏறத்தாழ ஆண்டொன்றுக்கு ஒன்றேகால் கோடி ரூபாயை அரசாங்கம் அந்தக் கல்லூரிக்கு நிதியாக தந்துகொண்டிருக்கிறது. இதுதான் இன்றைய நிலை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டுவிட்டார்கள். ஆகவே இதற்குப் பரிகாரம் மிக விரைவில் கிடைத்துவிடும் என்பதை மாத்திரம் சொல்லி, நான் மாண்புமிகு உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வேன். உங்களை, பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் வந்து பார்த்துப் பேசுகிறார்கள். தயவுசெய்து அவர்களிடத்தில் சொல்லி வையுங்கள். தயவுசெய்து ஒரு தவறை நீக்குவதற்கு இன்னொரு தவறான பரிகாரத்தை அவர்கள் தேடவேண்டாம் என்று சொல்லவேண்டுமென்று கேட்டு, இந்த விளக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.



1992 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி கையில் இந்தப் பிரச்சினை இருப்பதால், இந்தப் பிரச்சினை ஓய்ந்துவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏன் இவ்வளவு தூரம் சொல்கிறேன் என்றால், என்கூட படித்தவர்கள் 3 பேராசிரியர்கள் அங்கே டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் மிகவும் வருத்தப்படுகின்ற ஒரு விஷயம் இது. வேறு ஒரு பிரச்சினையையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன சொல்ல வருகிறீர்கள்? சுருக்கமாகச் சொல்லுங்கள். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் அமரவும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மேற்கொண்டு ஒரு சப்மிஷன். முன்னாள் தலைமைச் செயலாளர் ஒருவர் அங்கே இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நானும் மைனாரிட்டியைச் சார்ந்தவன்தான். மைனாரிட்டி ரைட் எடுக்கப்பட்டு, பெரிய பெரிய அதிகாரிகள் அங்கே நுழைந்துதான் இந்தப் பிரச்சினையை உருவாக்குகிறார்கள் என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன். இந்த முன்னாள் தலைமைச் செயலாளரைத் தவிர, சதர்ன் ரயில்வேயின் ஓய்வு பெற்ற ஜெனரல் மேனேஜர் ஒருவரும் அங்கே நுழைந்து மைனாரிட்டி ரைட் எடுக்கப்பட்டு, மைனாரிட்டிக்கு அங்கே வேலையில்லாமல், அதிகார வர்க்கம்தான் அந்தப் பிரச்சினையை உருவாக்கி, 3 பேரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்கிறேன். விரைவில் இது முடிக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமருகிறேன். (குறுக்கீடு)

[1992 ஜனவரி 31

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் நடவடிக்கைகளில் ஏதாவது மாறுதல் இருந்தால்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் வரும். உட்காருங்கள். திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள் பேசலாம்.

**திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டிலே எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மையிலேயே அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன் ஆனால் குடிதண்ணீர் வழங்குவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீரைப் பொறுத்த மட்டில் கிராமங்களிலே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. இப்போது அது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியம் அதை சிறப்பாக நடத்துவதற்கு அவர்களிடம் போதிய நிதி வசதி இல்லையென்று கூறி இன்றைக்குப் பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை யார் நிர்வகிப்பது என்பதை தெளிவாக இந்த அரசாங்கம் எங்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-30

அடுத்தபடியாக, நமது முதல்வர் அவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே இது ஒரு நல்ல திட்டம். ஏழையெளிய மக்களுக்கு இந்தத் திட்டம் சரியான முறையிலே போய்ச் சென்றடைய வேண்டும். அவ்வாறு சென்றடைவதற்கு எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த இந்த வேலைகளைத்தான் செய்ய வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்தந்த பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை அழைத்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களாவது, எந்தெந்த வேலைகளை எந்தெந்த பகுதியிலே எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஜனவரி 31] [திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்]

அடுத்தபடியாக சத்துணவுத் திட்டத்திலே, சென்ற கூட்டத் தொடரிலேயே, குறைக்கப்பட்ட எண்ணெயின் அளவை மீண்டும் வழங்குவதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இதுவரையில் அந்த எண்ணெயின் அளவைக் கூட்டிக் கொடுக்கவில்லை என்று எண்ணுகிறேன். அந்த எண்ணெயின் அளவை விரைவிலே கூட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***மண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற பட்ஜெட்டிலே, புரட்சித் தலைவி அவர்கள், எண்ணெயின் அளவைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று தேர்தல் நேரத்தில் கொடுத்திருக்கிற வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தெரிவித்ததற்கேற்ப அதற்கான எண்ணெயின் அளவு கூட்டப்பட்டிருக்கிறது. விரைவிலே அதற்கான உத்திரவு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்:** நன்றி. அந்த எண்ணெயின் அளவைக் கூட்டும்போது, மற்ற உணவுப் பொருள்களின் அளவைக் கூட்டி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது தமிழகத்திலே ஒரு பெரிய மின் திட்டம், கூடங்குளத்திலே ஏற்படுவதாக இருந்தது. இப்போது ருஷ்ய நாட்டிலே ஏற்பட்ட பிரச்சினையால் அது நடக்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்று அறிகிறோம். அடுத்தப்படியாக ஜெயங்கொண்டத்திலே ஒரு மின் நிலையம், 1,500 மெகாவாட் அளவிலே ஏற்படுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அதை நீங்கள் எந்த நிர்வாகத்துடன் சேர்ந்து ஏற்படுத்தப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களது மாவட்டத்திலே, சிவகங்கையிலே, 'இரால்வைட்' அதிகமாக இருக்கிறது. சென்ற கூட்டத் தொடரிலே முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த

[திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்] [1992 ஜனவரி 31

'கிராஃபைட் தொழிற்சாலையை உடனடியாக அந்தப் பகுதியிலேயே ஏற்படுத்துவதாகவும் அறிவித்தார்கள். அதற்காக நிதி கூட ஒதுக்கினார்கள். ஆனால் இது வரை அந்த தொழிற்சாலை அங்கே ஏற்படவில்லை.

நமது முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கூடிய விரைவிலே அந்தப் பகுதியிலே அந்த தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அந்தப் பகுதியின் வளம் நிச்சயமாக முன்னேற வாய்ப்பு இருக்கிறது. அங்கேயுள்ள கிராஃபைட்டை எடுத்து அந்தப் பகுதியிலேயே தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதை எடுத்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தை, தயவு செய்து இந்த அரசு கைவிட்டுவிட்டு, அந்த தொழிற்சாலையை அங்கேயே ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது உணவு பொருள்களின் விலைவாசி உயர்ந்திருக்கிறது. அதை மத்திய அரசு கூட்டியதா அல்லது மாநில அரசு கூட்டியதா என்பதற்குள் நான் வரவில்லை. மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, விலைவாசியைக் குறைக்க வேண்டியது நமது கடமை. மக்கள் நம்மைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இன்றைக்கு மத்திய அரசுதான் கூட்டி இருக்கிறது ; மத்திய அரசுதான் தமிழகத்தின் மீது எட்டப் பார்வை காட்டுகிறது, கிட்டப் பார்வை காட்டுகிறது என்று கூறிக் கொண்டிருப்பதை விட்டு, நிச்சயமாக விலைவாசியைக் குறைப்பதற்கு நமது அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் முதல்வர் அவர்கள் இந்த விலைவாசி இன்று உயர்ந்துகொண்டு இருப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு நிச்சயமாக முழு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

எங்களது மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அது கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டமும் தேவர் திருமகனார் மாவட்டமும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்த மாவட்டங்களை



1992 ஜனவரி 31] [திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்]

உடனடியாக பஞ்சப் பிரதேசமாக நீங்கள் அறிவிக்க வேண்டும். (குறுக்கீடு) வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். வறட்சி நிவாரண வேலைகளை உடனே நீங்கள் துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக இன்னுமொன்று. இன்றைக்குக் காலையிலே நமது முன்னாள் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருவுருவப்படம் இங்கே திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. அதை எண்ணிப் பார்க்கும்போது, உண்மையிலேயே நான் சார்ந்து இருக்கக் கூடிய கட்சி பெருமிதம் அடைகிறது. ஆனால் இன்னொன்று, ராஜிவ் காந்தி அவர்களுடைய படமும், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய படமும் திறந்து வைக்கப்பட வேண்டும். அதை ராஜாஜி ஹாலிலே திறந்து வைப்பதாகக் கூறி இருந்தார்கள். ஆனால் இன்னமும் அவை திறந்து வைக்கப்படவில்லை. உடனடியாக இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளே, பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளே அந்தப் படங்களைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, தேவகோட்டை நகரிலே 6—1—1992 அன்று சுமார் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் ஒரு வீட்டிலிருந்து களவு போய்விட்டது. அதை இதுவரையிலும் காவல் துறையினர் சரியான நடவடிக்கை எடுத்து திருடியவர்களைப் பிடிக்கவில்லை. அதுபோல், 2 ஆண்டுகளுக்கு முன்பு ஆதன்குடி என்ற ஊரிலே சுமார் 20 இலட்சம் மதிப்புள்ள ஒரு கோவிலின் கலசத்தைத் திருடிச் சென்று இருக்கிறார்கள். அதுவும் இதுநாள் வரை பிடி படாத நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் மக்கள் மத்தியிலே திருட்டுப் பயம் அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது. அதை இந்த அரசு கவனித்து உடனடியாக அந்தத் திருடர்களைப் பிடித்து அவர்களுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஒ. எஸ். அமர்நாத்.**

[1992 ஜனவரி 31

**திரு. ஓ. எஸ். அமர்நாத்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நம்முடைய சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து எனது உரையை ஆரம்பிக்கிறேன். தமிழ் நாட்டிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சரான பின்னர் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து நம்முடைய மக்கள் நன்கு அறிவார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்கும் முன்பு நமது மாநிலத்திலே வெளிநாட்டுப் போராளிகளும் தீவிரவாதிகளும் தமிழகத்தை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தார்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இன்றையதினம் பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் கடுமையாக அடக்கி ஒடுக்கி இங்குள்ள வாழ்க்கை முறையில் அமைதியை ஏற்படச் செய்து மக்களின் நன்மைக்காகப் பாடு பட்டுக்கொண்டு இருப்பவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலைநாட்டி, இந்த மாநிலத்திலே அமைதி தவழ எடுக்கப்பட்ட துணிவு மிக்க நடவடிக்கை பற்றியும் இந்த ஆளுநர் உரையில் கூறி இருப்பது பாராட்டத்தக்கது.

1992 ஆம் ஆண்டிலே தமிழகத்தின் பொருளாதாரம் படிப்படியாக உயரவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடும் குறிப்பாக ஏழை எளிய மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் வாழ்விலே வளம் காண வேண்டும் என்ற உயர்ந்த லட்சியங்களை அடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்தப் புதிய அரசு முழு மூச்சுடன் பல சீரிய இலட்சியங்களை அடைய தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு இருப்பது பாராட்டிற்குரியது.

பிற்பகல் 6-40

காவல்துறையை முற்றிலும் சீர்படுத்த வேண்டுமென்று, நவீனப்படுத்த வேண்டுமென்று நல்ல எண்ணத்தில், காலத்திற்கு ஏற்றவகையில் அதை மாற்றியமைக்க ரூ. 80.45 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ள திட்டம் மக்கள் மத்தியில் பெரிதும் பாராட்டைப்பெறும் ஒன்றாக இருக்கிறது.



1992 ஜனவரி 31] [திரு. ஓ. எஸ். அமர்நாத்]

நடைபெற்ற தேசிய வளர்ச்சி குழு கூட்டத்தில் பாமர மக்கள் பயன்படுத்துகிற பொருள்களின் விலைகள் பெரிதும் உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறியதை இந்த கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளது பாராட்டிற்குரியதாகும். மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு இன்றியமையாப் பொருள்கள் விலையை உயர்த்தி இருக்கிறது. அதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கண்டித்துப் பேசியிருப்பதும் பாராட்டிற்குரியது. ஏழைகள் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் நம்முடைய டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கருத்தை திரைப்படத்தில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆடைகளை அடுக்கி வைத்துக்கொண்டு, அவற்றில் எந்த ஆடையை உடுத்துவது என்று ஒருபுறம் ஆத்திரப்படும் கூட்டம் ஒன்று இருக்க, ஒரே ஒரு சேலையை வைத்துக்கொண்டு இரண்டு சகோதரிகள் தினமும் மாற்றி மாற்றி உடுத்துகிற நிலையில் இருக்கும் மக்கள் மற்றொரு பக்கம் இருக்கிறார்கள் என்றார். இந்த நிலையில் உள்ள ஏழைகளுக்கு உதவுகிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச வேஷ்டி சேலைகளை வழங்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை எப்படி பாராட்டினாலும் மிகையாகாது. ஆளுநர் உரையில் இந்தத் திட்டத்தைப் பற்றி பாராட்டி கூறியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

தொழில் துறையில் தமிழகத்தை இந்தியாவில் முதல் மாநிலமாக ஆக்கவேண்டுமென்று ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். புதிதாக தொடங்கப்படும் தொழிலுக்கு 3 ஆண்டுகள் மின்சார சலுகை அளித்து இருக்கிறார்கள். 20 லட்சம் ரூபாய் முதல் போட்டு தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு 10 சதவீதம் மானியம் கொடுக்க வேண்டுமென்று ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து, தொழில் தொடங்குவதற்கு முதலாளிகளை கூப்பிட்டு பேசியிருப்பதை இந்த ஆளுநர் உரையில் சொல்லியிருப்பது பாராட்டிற்குரியது. ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை தயாரிக்கும் தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு மின்சார கட்டணச் சலுகை அளித்து இருப்பது பாராட்டிற்குரியது.

[திரு. ஓ. எஸ். அமர்நாத்] [1992 ஜனவரி 31

மாநிலத்தில் உள்ள மத்திய அரசு திட்டங்களுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதியளிக்கும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதை ஆளுநர் உரையில் சொல்லியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. தொழில் வளர்ச்சிக்கு மின்சக்தி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும், தனியார் துறை மின் உற்பத்தி செய்வதற்கும் இயலும் வகையில் ரூ. 7,000 கோடி செலவிலான புதிய திட்டத்தை ஏற்படுத்தி, இதன் மூலம் 1,500 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவைப் பெற வேண்டியுள்ளது. ஆனால் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மாநில அரசுக்கு இந்தத் திட்டத்தை வழங்காமல் இருப்பது வேதனைக்குரியது.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத்தில் தற்போது ஓராசிரியர் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்று ஆளுநர் உரையில் சொல்லியிருப்பது உண்மையில் ஆசிரியர் பெருமக்களின் வேலைவாய்ப்பு பிரச்சினையை குறைக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. ஒருங்கிணைந்த மகளிர்மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கிராமப் பகுதிகளில் ஒரு இலட்சம் மகளிருக்குச் சுயவேலை வாய்ப்பு வசதி அளிப்பதற்காக அரசு எண்ணியுள்ளது. இந்தத் திட்டம் ஆளுநர் உரையில் கூறியிருப்பது பாராட்டிற்குரிய ஒன்றாக அமைந்து இருக்கிறது.

இலவசக் கல்வித் திட்டம் ஒன்றை ஆரம்பித்து, காமராஜர் அவர்களுக்கு இணையாக, அதற்கு மேலாக அதனை அமைத்து நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதுதான் அறிவொளி இயக்கம். தமிழ் நாடெங்கும் அறிவொளி இயக்கம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏழை மக்கள், சமுதாயத்தில் வசதி வாய்ப்புற்றவர்கள் தங்களுடைய உடல், மன, அறிவாற்றல் ஆதாரங்களை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, மதுரை, வட ஆற்க்காடு-அம்பேத்கார், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய



1992 ஜனவரி 31] [திரு. ஓ. எஸ். அமர்நாத்]

16 ஜூலை
பிற்பகல் 6-45

மாவட்டங்களில் முழு அளவில் அரசு வெற்றிகரமாக அறிவொளி திட்டத்தை தொடங்கி வைத்துள்ளது பாராட்டிற்குரியது. ஏழு மாவட்டங்களிலே 11 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் வயது வந்த 18.35 லட்சம் பேர்களுக்கு எழுத்தறிவைப் புகுத்துகின்ற இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவது பாராட்டுக்குரியதாகும்.

என்னுடைய தொகுதியில், மதுரை கிழக்குத் தொகுதியில் குறிப்பாக பாலகங்காபுரம் என்ற பகுதியிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அந்த மருத்துவமனையை விரிவாக்க வேண்டும் என்று நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை கிழக்குத் தொகுதியிலே நெசவாளர் பெருமக்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை கிழக்குத் தொகுதியிலே சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே வேலை பார்த்தபின், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு சரியாக ஓய்வூதியம் வராமல் இருப்பது குறித்து நான் பலமுறை அதிகாரிகளிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, இங்கே பேச வாய்ப்பு அளித்த நல்ல மனம் படைத்தவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு முதலில் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

V211, 31 I 92
92.14.2

[ஏ. கே. சி. சுந்தரவேல்] [1992 ஜனவரி 31

காவல்துறையை நவீனப்படுத்த 80.45 கோடி ஒதுக்கி, அதில் முதல் கட்டமாக 10 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்து, நமது மாநிலத்திலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கையைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

மேலும், இதய தெய்வம், புரட்சித் தலைவி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தீவிரவாதிகள், வெளிநாட்டுப் போராளிகள் ஒடுக்கப்பட்டனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைத் தவிர, வேறு எந்த முதல்வராலும் இதை ஒழித்து இருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை இவ்வளவு காலமாகியும் தீராமல், இந்த அளவிற்கு ஆனதற்கு முழுக் காரணம் கருணாநிதியின் கையாலாகாத காரணம்தான். எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை கருணாநிதி எடுத்திருந்தால், கர்நாடகவாழ் தமிழர்களுக்கு இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது. மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையால் 5 கோடி தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவை, நடுவர் மன்றத்தின் உத்தரவை, மத்திய அரசு, அதனுடைய அரசிதழிலே வெளியிட்டது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். அரசுக்கு நிதி நெருக்கடி இருந்தும், கர்நாடக தமிழர்களுக்கு நிவாரணம் அளித்து, உணவு, துணிமணிகள் போன்ற அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையிலே வெற்றி பெறுமா, காளை மாட்டின் கொம்பைத் தொட்டுவிட்டால், அது குத்தாமல் விடாது என்று எல்லாம் பேசினார்கள். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையால், கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டது. அதற்காக மதுவிலக்குத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அத்தியாவசியமாக உள்ள பண்டங்களின் விலையைப் பெருத்தவரையில், மத்திய அரசு மாநில அரசுகளைக் கலக்காமல், அரிசி, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி



1992 ஜனவரி 31] [ஏ. கே. சி. சுந்தரவேல்]

போன்ற பொருட்களின் விலையை ஏற்றியதற்குக் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு, மாநில அரசுகளைக் கலந்துதான் முடிவு எடுக்கவேண்டும் என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்த கருத்தை வரவேற்கிறேன்.

மத்திய அரசு, அரிசி விலையை உயர்த்தியும் ஏழைகளின்பால் கருணை கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், சாதாரண அரிசி 2 ரூபாய் விலையிலே கிடைக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோல், ஒரு கோடியே 20 லட்சம் ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை கொடுத்து, தமிழக ஏழை எளிய மக்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, தொழில் கொள்கையை எளிதாக்கி, மாவட்டந்தோறும் தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தி, தொழில்களுக்குக் கிடைக்கவேண்டிய, உதவிகள், மானியங்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்தமைக்கு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள மின் பற்றாக்குறையைப் போக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, ஜெயங்கொண்ட சோழபுரத்திலே நிலக்கரியை வெட்டி எடுத்து, ரூபாய் 7 ஆயிரம் கோடியில், புதிய திட்டத்தைத் தீட்டி, அதன் மூலம் 1,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய தீட்டியுள்ள திட்டம், சிறிய திட்டமாகும்.

சென்னை மாநகரத்திற்கு, 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும் வகையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, சென்னை நகர மக்களுக்கு நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இருப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

[வி. கே. சி. சுந்தரவேல்] [1992 ஜனவரி 31

தமிழகத்திலே எழுதப் படிக்கத் தெரியாதவர்களே, இருக்கக் கூடாது என்று, இந்த அரசு 'அறிவொளி இயக்கத்தை' ஏற்படுத்தி, கல்லாமை என்பதை இல்லாமை ஆக்கவேண்டும் என்று, முதலிலே ஏழு மாவட்டங்களிலே அறிவொளி இயக்கம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதனால், எங்களுடைய வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலே, 1993-94 ஆம் ஆண்டு வாக்கிலே எழுதப்படிக்கத் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள்

பிற்பகல் 6-50

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி கொண்டு வந்துள்ள இலவச மருத்துவ முகாமில், பட்டிதொட்டிகளிலே யெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடைத்து, நோயற்ற வாழ்வே வாழ்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நல்ல உள்ளத்தைக் காணலாம். அவரது பொற்கால ஆட்சியில் கடந்த காலங்களைக் காணும்போது, வரலாறு காணாத அளவிலே மழை பெய்து, மூன்று மாத காலமாக எங்கள் மாவட்டத்திலே ஓடும் பாலாற்றிலே வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலே பார்க்கும்போது, பாலாற்றிலே 2 நாட்கள், அல்லது 3 நாட்கள் தான் ஆற்றிலே தண்ணீர் ஓடும். இதிலிருந்தே, புரட்சித் தலைவி அவர்களுடைய, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உள்ளம் நல்ல உள்ளம் என்பது புலனாகிறது.

ஆளுநர் உரையிலே நாட்டுமக்களுக்கு நல்ல திட்டங்களை அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கு எனது பாராட்டுக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 4—2—1992 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை, பிற்பகல் 6.51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



1992 ஜனவரி 31]

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்**

ஏதுமில்லை.

**ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

10. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை, 1991-92.

11. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை, 1991-92.

12. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தியாறாவது அறிக்கை, 1991-92.

13. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை, 1991-92.

14. அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1991-92.

800 009
162264

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Teanure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.